# கிறிஸ்துவில்

## ஒரு புது வாழ்வைத் துவங்குல்

சீஷத்துவ தொடர்

முன்னோடி சுவிசேஷஊழியம் தொடர்

Christy Akins Brawner



# கிறிஸ்துவில் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்

கிறிஸ்டி அகின்ஸ் பிராவ்னர்

சீஷத்துவ தொடர்

முன்னோடி சுவிசேஷ ஊழியம் தொடர்

## "கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்" நூலைப் பயன்படுத்துவது எப்படி?

நீங்கள் வேதாகமக் கதையைச் சொல்லி, வேதாகமச் சத்தியங்களைப் பகிர்ந்துகொள்ளும்போது கீழ்க்கண்ட ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்:

1. எப்போதுமே ஒருவரை மரியாதையோடு நடத்த வேண்டும். கதையைச் சொல்லலாமா என்று அவரிடம் அனுமதி கேட்டபிறகு ஒவ்வொரு வாரமும் தொடர வேண்டும்.

2. அமைதியான, உரையாடுவதுபோன்ற குரலில் பேசுங்கள். தனிப்பட்டவரிடம் பிரசங்கம் செய்யாதிருங்கள்.

3. சத்தியங்களைக்குறித்து விவாதிக்க வேண்டாம். அவிசுவாசிகளின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் கிரியைசெய்து, பாவத்தை உணர்த்தி, சத்தியத்தைக்குறித்த உறுதியைக் கொடுக்க அனுமதியுங்கள்.

4. அந்த நபர் எதை விசுவாசிக்கிறாரோ அதற்காக அவரை நியாயந்தீர்த்து, குற்றப்படுத் தாதிருங்கள். வேதாகமத்தை ஆய்வுசெய்து, பரிசுத்த ஆவியானவர் வசனத்தின் மூலமாகக் கிரியை செய்ய அனுமதியுங்கள்.

5. ஒவ்வொரு கூட்டத்தையும் தேவன் கதைகளைப் புரிந்துகொள்ள உதவுமாறு கேட்டு ஒரு சிறிய ஜெபத்தோடு துவங்குங்கள்.

6. கதையைச் சொல்ல கீழ்க்கண்ட வழிமுறையைப் பின்பற்றுங்கள்: புத்தகத்திலிருந்து ஒவ்வொரு வாக்கியமாக வாசித்து, வாசித்ததை உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்குங்கள். இதன் மூலம் அந்த நபர் கதையை இரண்டு முறை கேட்க முடியும், மிகவும் எளிய முறையில் அதன் விளக்கத்தை அறிய முடியும். உங்களிடம் போதுமான பிரதிகள் இருக்குமானால் ஒவ்வொருவரும் வாசித்து, பங்கெடுக்குமாறு செய்யுங்கள்.

7. கதையின் முடிவில் தலைவர் வாய்மொழிக் கேள்விகளைக் கேட்க வேண்டும். மறு ஆய்வு செய்து, கதையைப் புரிந்திருக்கிறார்களா என்று கண்டறிவதே இதன் நோக்கமாகும்- விரிவுபடுத்துவதற்காகவோ அல்லது விவாதத்துக்காகவோ அல்ல!

8. ஆவிக்குரிய சத்தியங்களை வாசியுங்கள். ஒவ்வொரு சத்தியத்தையும் விவாதித்து, கேள்வி கேட்கக் குழு உறுப்பினர்களை அனுமதியுங்கள். எவரோடும் ஒருபோதும் விவாதிக்காதீர்கள். இந்த இடத்தில் உறுப்பினர்கள் ஆவிக்குரிய சத்தியங்களை ஒப்புக்கொள்ளுவதோ அல்லது ஏற்றுக்கொள்ளுவதோ அவசியமில்லை. தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி அவர்கள் சத்தியத்தைப் புரிந்துகொள்ளுவதே முக்கியமாகும்.

9. ஆவிக்குரிய சத்தியங்களுக்குப் பிறகு, உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்கள் தேவைகளையும் ஜெப விண்ணப்பங்களையும் குழுவோடு பகிர்ந்துகொள்ள அனுமதியுங்கள்.

10. ஒவ்வொரு தேவைக்காகவும்/குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்காகவும் குறிப்பாக ஜெபியுங்கள். குழு வளர்ச்சிபெற்று மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது, இந்தப் பரிந்துரை ஜெப வேளையில் உறுப்பினர்கள் ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்க அனுமதியுங்கள்.

11. ஏழாம் பாடத்தின் முடிவில் அவர்கள் இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்படி நீங்கள் அழைக்க வேண்டும். ஆனால் எவரேனும் இந்த ஏழு வாரங்களின் இடைப்பட்ட நேரத்தில் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்க ஆர்வம்காட்டினால், இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளுவது எப்படி என்று அவர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்கள் அதன்படி செய்வதற்கான வாய்ப்பைக் கொடுக்க வேண்டும்.

# கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "இயேசுவின் முதலாம் வருகையும் இரண்டாம் வருகையும்" - பாடம் 1

## மத்தேயு 1 மற்றும் 24

"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்... நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" மத்தேயு 24:42, 44.

*கூடுமானால் எழுதத் தெரிந்த குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் இந்த ஆய்வுக்கு வரும்போது, ஒரு நோட்டுப் புத்தகத்தையும் பேனாவையும் கொண்டுவரும்படி சொல்லுங்கள்.

அறியப்பட்டிருந்த உலகத்தை ரோமர்கள் ஆளுகைசெய்துவந்த வேளையில், இஸ்ரவேல் நாட்டில் மரியாள் என்ற இளம் கன்னிகை இருந்தாள். அவள் யோசேப்பு என்ற மனிதனுக்கு நியமிக்கப் பட்டிருந்தாள். அவர்களுக்குத் திருமணமாவதற்கு முன்பே மரியாள் கர்ப்பமானாள். இதை அறிந்த யோசேப்பு தங்கள் திருமண ஒப்பந்தத்தை முறித்துப்போட விரும்பினான். மரியாளுக்கு அவமானம் உண்டாகாதபடி இதை இரகசியமாகச் செய்யும்படி அவன் திட்டமிட்டான்.

இரவில் அவன் இவைகளைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தபோது, கர்த்தருடைய தூதன் அவனிடம் வந்தான். மரியாள் அவனை ஏமாற்றவில்லை என்றும், அவள் பரிசுத்த ஆவியானவரால் இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் கர்ப்பந்தரித்திருக்கிறாள் என்றும், அவளைத் திருமணம் செய்து கொள்ளும்படியும் தூதன் அவனிடம் கூறினான். பழைய யூதத் தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்ட குழந்தையை மரியாள் பெறப்போகிறாள் என்று தூதன் அவனிடம் கூறினான். "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் குறிப்பிடப்பட்ட குழந்தை இதுதான்.

யோசேப்பு தூதன் கூறியதை விசுவாசித்தான். மரியாளைத் தனது மனைவியாக ஏற்றுக்கொண்டான். என்றாலும் இயேசு பிறக்கும் வரையில் அவன் அவளோடு எந்த உறவும் கொள்ளாதபடியால், இயேசு ஒரு கன்னிகையினிடத்தில் பிறந்தார். யோசேப்பு அந்தப் பிள்ளைக்கு இயேசு என்று பெயரிட்டான்.

*இயேசுவின் வருகையைக் குறித்து வேதாகமத்தில் பல தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவருடைய பிறப்பு மட்டுமல்லாமல், அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்தும் பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. இயேசுதாமே தாம் யார், என்ன செய்யப்போகிறோம் என்பதைக் குறித்துப் பல வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். இயேசுவின் சில தீர்க்கதரிசனங் களும், பழைய ஏற்பாட்டின் சில தீர்க்கதரிசனங்களும் இன்னும் நிறைவேறவில்லை. இயேசு மறுபடியும் இந்த உலகத்துக்கு வருவார் என்று இந்தத் தீர்க்கதரிசனங்கள் சொல்லுகின்றன. கிறிஸ்து முதலில் வந்தபோது, அவர் பாடுபடும் தாசனாக வந்தபடியால், தாழ்மையான இடத்தில் பிறந்தார். ஆனால் அவருடைய இரண்டாம் வருகை முற்றிலும் வித்தியாசமாக இருக்கும் என்று வேதாகமம் போதிக்கிறது.*

இயேசு ஒலிவமலை என்ற இடத்தில் தம்மைப் பின்பற்றியவர்களோடு பேசியபோது, தாம் திரும்பி வருவதைக் குறித்து அவர்களுடன் பேசினார். "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" என்ற கேள்விக்குப் பதில் சொல்லும் விதமாக அவர் இவைகளைக் கூறினார்.

முதலில் அவர்களுக்கு ஒரு எச்சரிப்பைக் கொடுத்தார்: எவரும் ஏமாற்றப்படாத வகையில் அதிகக் கவனமாக இருக்க வேண்டுமென்று அவர் கூறினார். அவருடைய வருகை நெருங்க நெருங்க

அதிகமான மக்கள் அவருடைய பெயரைச் சொல்லிக்கொண்டு வருவார்கள் என்று அவர் கூறினார். "நான்தான் கிறிஸ்து" என்று அவர்கள் கூறுவார்கள். துரதிருஷ்டவசமாக, அதிகமான மக்கள் இந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகளை நம்புவார்கள். இந்த நாட்களில் உலகத்தின் வெவ்வேறு மக்களிடையே போர்கள் நடக்கும். நான்கு பயங்கரமான அழிவுகள் நடக்கும்: யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும், பஞ்சம், கொள்ளைநோய், பூமியதிர்ச்சி. ஆனால் இந்தக் காரியங்கள் துவக்கம் மட்டுமே. காலத்தின் முடிவுக்குள்ளாக இன்னும் மோசமான காரியங்கள் நடக்கும்.

ஏனென்றால், மக்கள் ஒருவரையொருவர் காட்டிக்கொடுப்பார்கள். ஒருவர் மற்றவரைக் கொன்று போடுவார்கள். இயேசுவின்மீது நம்பிக்கை வைப்பதின் காரணமாக ஒருவர் மற்றவரை வெறுப்பார்கள். பல கள்ளத்தீர்க்கதரிசிகள் மக்களை ஏமாற்றிக்கொண்டு திரிவார்கள். அக்கிரமம் அதிகமாகிறபடியால் மக்கள் முன்பு ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த அன்பு தணிந்துபோகும். ஆனால் இந்த எல்லாக் காரியங்களின் ஊடாகவும் எல்லா இனத்தாரும் கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்படும் வரையில் கிறிஸ்துவின் நற்செய்தி தொடர்ந்து பகிர்ந்துகொள்ளப்படும். பிறகு முடிவு வரும்.

உலகமெங்கும் அதிகமான பாடுகளும், துன்பங்களும் காணப்படும். மனிதன் தான் விரும்பியபடி செய்யத் தேவன் தொடர்ந்து அனுமதிப்பார் என்றால், மனுக்குலம் தன்னைத்தானே முழுவதுமாக அழித்துக்கொள்ளும். ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களின் காரணமாக தேவன் பூமியில் துன்பம் மற்றும் பாடுகளின் நாட்களைக் குறையப்பண்ணுவார்.

எனவே ஒவ்வொரு இடமும் சென்று அற்புத அடையாளங்களைச் செய்யும் கள்ளத் தீர்க்கதரிசிகளையும், கள்ளக் கிறிஸ்துக்களையும் நம்பாதிருங்கள். இவர்கள் மக்களை வஞ்சிக்கவே முயலுகிறார்கள். முக்கியமாக இயேசுகிறிஸ்துவுக்குத் தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்திருப்பவர் களை ஏமாற்ற முயலுகிறார்கள்.

ஒருநாள் மின்னல் கிழக்கிலிருந்து மேற்கே பாய்வதுபோல மனுஷகுமாரனுடைய வருகை இருக்கும். பாடுகளுக்குப் பிறகு, சூரியன் இருண்டுபோகும், சந்திரன் தனது ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழுந்துபோகும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். பிறகு வானத்தில் மனுஷகுமாரனின் அடையாளம் தோன்றும். பிறகு பூமியின் எல்லா இனத்தாரும் புலம்புவார்கள். மனுஷகுமாரன் வல்லமையோடும், அதிக மகிமையோடும் வானத்தின் மேகங்கள் நடுவே வருவதை அவர்கள் காண்பார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் தங்கள் வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்.

ஆனால் எப்போது இது நடக்கும் என்பது எவருக்கும் தெரியாது. இயேசு எப்போது பூமிக்குத் திரும்பிவருவார் என்பதை வானத்திலுள்ள தூதர்கள்கூட அறியமாட்டார்கள். பிதாவானவரைத் தவிர வேறு எவரும் இயேசு எப்போது பூமிக்குத் திரும்பிவருவார் என்பதை அறிய மாட்டார்கள்.

"எனவே மனுஷகுமாரன் நீங்கள் எதிர்பாராத ஒரு நேரத்தில் வரப்போகிறார் என்கிறபடியால், ஆயத்தமாக இருங்கள்."

## நேர்முகக் கேள்விகள்

1. இயேசு எந்த நாட்டில் பிறந்தார்?
2. இயேசுவின் உலகப் பெற்றோரின் பெயர்கள் யாவை?
3. இயேசு முதலில் இந்த உலகத்துக்கு வந்தபோது நடந்த அற்புதம் என்ன?
4. இயேசு ஒரு கன்னிகையிடத்தில் பிறப்பார் என்றும், அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிட வேண்டுமென்றும் ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்தார். இம்மானுவேல் என்பதின் அர்த்தம்: "__________________________".
5. இயேசு ஒலிவமலையில் தமது சீஷர்களோடு இருந்தபோது, அவர்கள் அவரிடம் கேட்ட கேள்வி என்ன?

6. இயேசு தமது சீஷர்களிடம் எப்படிப்பட்ட மக்களால் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கூறினார்?

7. பலர் தாங்கள் யாரென்று உரிமைகொண்டாடி வருவார்கள் என்று அவர் கூறினார்?

8. தாம் உலகத்திற்குத் திரும்பி வருவதற்கு முன்பாக நான்கு பயங்கரமான காரியங்கள் நடக்கும் என்று இயேசு கூறினார். அவை யாவை? யு________________, ப________________, கொ________________, பூ______________________________.

9. தம்மைப் பின்பற்றுகிறவர்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பதால் பாடுபடுவார்கள் என்று இயேசு கூறினார். மக்கள் ஒருவருக்கொருவர் என்ன செய்வார்கள் என்று இயேசு கூறினார்?

10. இயேசுவைப் பின்பற்றுகிறவர்களை ஏமாற்றுவதற்காகக் கள்ளத்தீர்க்கதரிசிகள் எப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வல்லமை பெற்றிருப்பார்கள் என்று இயேசு கூறினார்?

11. தம்முடைய வருகை இயற்கையில் எதைப்போல இருக்கும் என்று இயேசு கூறினார்?

12. இயேசு மறுபடியும் வரும்போது, சூரியனுக்கும், சந்திரனுக்கும் நட்சத்திரங்களுக்கும் என்ன நேரிடும்?

13. தூதர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களைக் கூட்டிச் சேர்க்கும்போது எந்த வாத்தியத்தை இசைப்பார்கள்?

14. தேவனுடைய மக்கள் எங்கே கூடிவருவார்கள்?

15. இயேசு எப்போது மறுபடியும் வருவார் என்பதை அறிந்த ஒரேயொருவர் யார்?

16. இயேசுவின் நாமத்தில் செய்யப்படாத அற்புதங்களை ஒருவர் செய்யும்போதோ அல்லது தான் கிறிஸ்து என்று சொல்லும்போதோ நான் என்ன செய்ய வேண்டும்?

# ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 1

## மத்தேயு 1, 24

1. இயேசு தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்படியாக முதன்முறை வந்ததுபோல, வல்லமையோடும், அதிக மகிமையோடும் மறுபடியுமாக வரப்போகிறார். பல பொய்யான சமயங்கள் இருக்கின்றன, கள்ளத்தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள், பலர்தாங்களே கடவுள் என்று உரிமைகொண்டாடுகிறார்கள். இயேசு மறுபடியுமாக வரும்போது, அவர் யார் என்பதில் சந்தேகமே இருக்காது. ஒவ்வொரு முழங்காலும் முடங்கும், இயேசுவே ஆண்டவர் என்று ஒவ்வொரு நாவும் அறிக்கையிடும் என்று வேதாகமம் கூறுகிறது. தான் ஒரு புதிய தீர்க்கதரிசி, ஒரு புதிய கிறிஸ்து அல்லது ஒரு கடவுள் என்று சொல்லிக்கொண்டு நம்மிடம் வரும் எல்லோரும் கள்ளத் தீர்க்கதரிசிகளாகவும், போலிகளாகவும் இருக்கிறார்கள்.

2. அவர் வானத்தின் ஒரு முனை தொடங்கி மறுமுனை வரையிலும் தம்முடையவர்களைச் சேர்த்துக் கொள்ளுவார்.

   ❖ இயேசு தாம் வருவதாக வாக்குத்தத்தம் கொடுத்திருந்தார், அதன்படி அவர் வந்தார். மறுபடியும் வருவதாக அவர் வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார், அதன்படி அவர் மறுபடியும் வருவார். தம்மைப் பின்பற்றும் எல்லோரையும் சேர்த்துக்கொள்ளுவதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார், அவர் அதன்படி செய்வார்.

   ❖ நமது வாழ்க்கையில் வரும்படி இயேசுவிடம் வேண்டிக்கொள்ளும்போது, நமது இருதயத்தை அவருக்குக் கொடுக்கும்போது, தாம் நம்மை ஒருபோதும் கைவிடுவதுமில்லை, விட்டு விலகுவதுமில்லை என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அதாவது, நாம் பாவம் செய்தாலும் (எல்லோரும் பாவம் செய்வோம்) தேவன் நமக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராக இருக்கிறார். நமக்கு என்ன நேரிட்டாலும், அல்லது நாம் எதைச் செய்தாலும், நமது வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்திருப்போமானால், அவர் நம்மைத் தம்மோடுகூடப் பரலோகத்துக்கு அழைத்துச் செல்லுவார். அவர் திரும்பி வரும்போது, மேகங்களில் அவரைச் சந்திப்போம்.

3. அவரைப் பின்பற்றுவதின் காரணமாகத் தேவனுடைய மக்கள் பாடுபடுவார்கள்.

உலகம் முடிவை நெருங்கும்போது, மக்கள் இன்னுமதிகமாகத் தீயவர்களாக மாறுவார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. அவர்கள் பிறரை அதிகமாக வெறுப்பார்கள், அதிகக் கொலைகளைச் செய்வார்கள், ஒருவரையொருவர் அதிகமாகக் காட்டிக்கொடுப்பார்கள். பலர் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களை வெறுத்து, அவர்களை மோசமாக நடத்துவார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது. நீங்கள் இயேசுவைப் பின்பற்றும்படி தீர்மானம் எடுத்திருக்கிறபடியால், மக்கள் உங்களை வித்தியாசமாக நடத்துவதை நீங்கள் ஏற்கெனவே அனுபவித்திருக்கலாம். உங்கள் இருதயத்துக்குள் வரும்படி இயேசு கிறிஸ்துவிடம் வேண்டிக்கொண்ட பிறகு உங்களைக் குறித்த மக்களின் மனோபாவம் எப்படி மாறியிருக்கிறது? கிறிஸ்துவைப் பின்பற்றும் உங்கள் தீர்மானத்தின் காரணமாக உங்கள் நெருங்கிய நண்பர்களோ அல்லது குடும்பத்தாரோ உங்கள் நட்புறவைக் காட்டிக்கொடுத்திருக்கிறார்களா?

நாம் இப்படிப்பட்டவர்களிடம் அன்புகாட்ட வேண்டுமென்று வேதாகமம் போதிக்கிறது (மத்தேயு 5:43-48). நம்மை வெறுத்து, நமக்குப் பாதிப்பை உண்டுபண்ணியவர்களிடத்தில் நாம் அன்புகாட்ட வேண்டும். நாம் அவர்களை நேசித்து, அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். தம்மைப் பாதித்து, தம்மைக் காட்டிக்கொடுத்தவர்களிடம் இயேசு இப்படித்தான் நடந்துகொண்டார். கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டுமானால் அவருடைய அன்பின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காகப் பாடுகளை அனுபவிப்பவர்களுக்கு, துன்புறுத்தப்படுபவர்களுக்குச் சிறப்பான ஆசீர்வாதம் காத்திருக்கிறது என்றும் வேதாகமம் சொல்லுகிறது. நாம் ஒருநாளில் இதற்கான பயனை

அடைவோம் என்கிறபடியால் இதைச் சந்தோஷமாக எண்ண வேண்டுமென்று வேதாகமம் கூறுகிறது.

- இந்தக் கூட்டத்தை நாம் ஜெபத்தோடு முடித்துவைப்போமாக. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிறகு உங்களுக்கு என்ன நேரிட்டது என்பதை ஒவ்வொருவரும் பகிர்ந்துகொள்ள அனுமதியுங்கள். அது அழகானதாகவும் இருக்கலாம், இல்லாமலுமிருக்கலாம். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால் யாராவது துன்புறுத்தப்பட்டிருக்கிறார்களா? ஒரு குழுவாக நாம் இந்த நபருக்காக ஜெபிக்க மறக்கக்கூடாது.

- ஆனால் நாம் ஜெபிப்பதற்கு முன்பாக, நோட்டுப் புத்தகத்தையும் அல்லது ஒரு காகிதத்தையும் பேனாவையும் கொண்டுவந்திருப்பவர்கள் அவைகளை வெளியே எடுக்க வேண்டும். உங்களிடம் ஒரு நோட்டுப் புத்தகம் இருக்குமானால், ஒவ்வொரு பக்கத்திலும் குழு உறுப்பினர் ஒருவருடைய பெயரை எழுதுங்கள். ஒவ்வொரு நபரின் பெயருக்குக் கீழாக அவருக்குரிய ஜெப விண்ணப்பங்களை நாம் எழுதுவோம். ஒவ்வொரு நபரின் ஜெப விண்ணப்பங்களையும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களின் பட்டியலையும் நாம் தயாரிக்க வேண்டும். இந்தப் பட்டியல்களை ஒருவர் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். நமது நண்பர்களுக்காகவும், அன்புக்குரியவர்களுக்காகவும் நாம் ஒன்றாகச் சேர்ந்து போராடுவோமாக.

- இந்த வாரம் நாம் கலைந்துசெல்லும்போது, ஒவ்வொரு நாளும் ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்கும்படி வாக்குக்கொடுக்க வேண்டும். இந்த நோட்டுப் புத்தகத்தை அல்லது காகிதத்தை உங்கள் படுக்கையறையில் வைத்து, படுக்கைக்குச் சொல்லும்போதும், அதைவிட்டு எழும்போதும் இதை எடுத்து ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்க மறவாதீர்கள்.

- தேவன் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராக இருப்பதற்காக அவருக்கு நன்றி கூறி இந்தக் கூட்டத்தை முடிப்போம். நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காக முதன்முறை உலகத்துக்கு வந்ததற்காகவும், அவருடைய இரண்டாம் வருகை குறித்த வாக்குத்தத்தத்துக்காகவும் அவருக்கு நன்றி கூறுவோம். வரும் வாரத்தில் ஒவ்வொரு நாளும் உண்மையோடு ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்க உதவிசெய்யுமாறு அவரிடம் வேண்டுவோம்.

# கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "இயேசு எகிப்துக்குச் செல்லுதலும், அவருடைய ஞானஸ்நானமும்" - பாடம் 2

## மத்தேயு 2 - 3

``இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" மத்தேயு 3:16-17.

**மறு ஆய்வு**

1. இயேசுவின் தாயின் பெயர் ____________________.
2. இயேசு இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார். அதற்கு "தேவன் ____________________" என்று அர்த்தமாகும்.
3. இயேசு மறுபடியும் உலகத்துக்குத் திரும்பி வருவதைக் குறித்துச் சீஷர்கள் இயேசுவிடம் கேட்டபோது, அவர் அவர்கள் ____________________ ____________________இவர்களால் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கூறினார்.
4. பலர் தாங்கள் ____________________ என்று சொல்லி உரிமைகொண்டாடுவார்கள் என்று இயேசு கூறினார்.
5. இவை போன்ற பயங்கரமான காரியங்கள் உலகத்தில் நடக்கும் என்று இயேசு கூறினார்: யு_______________, ப_____________, கொ_______________, பூ________________________.
6. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் பாடுபடுவார்கள் என்று இயேசு கூறினார். ஏன்?
7. தமது வருகை இயற்கையில் எதைப்போல இருக்குமென்று இயேசு கூறினார்?
8. தேவதூதர்கள் தேவனுடைய மக்களை எங்கே கூட்டிச் சேர்ப்பார்கள்?
9. இயேசு எப்போது மறுபடியும் வருவார் என்பதை அறிந்த ஒரேயொருவர் யார்?
10. இயேசுவின் நாமத்தில் செய்யப்படாத அற்புதங்களை ஒருவர் செய்யும்போதோ அல்லது தான் கிறிஸ்து என்று சொல்லும்போதோ நான் என்ன செய்ய வேண்டும்?
11. கிறிஸ்துவின் காரணமாக யாராவது என்னை இழிவுபடுத்தினால் நான் ____________________ எண்ணிக்கொள்ள வேண்டும்.
12. கிறிஸ்துவின் காரணமாக மற்றவர்கள் என்னைத் தவறாக நடத்தும்போது, நான் அவர்களை ____________________ நடத்த வேண்டும்.

இயேசு பெத்லகேமில் பிறந்தார். கிழக்கிலிருந்து சில சாஸ்திரிகள் அவரைக் காண வரும்வரையில் அவர் அங்கேயே வசித்தார். இந்த மனிதர்கள் ஒரு பிரகாசமான நட்சத்திரத்தைப் பின்பற்றி இஸ்ரவேலுக்கு வந்திருந்தார்கள். யூதேயா பிராந்தியத்தில் நுழைந்தபோது, அவர்கள் முதலில் தலைநகராகிய எருசலேமுக்குச் சென்றார்கள். அவர்கள் ஏரோது ராஜாவிடம் சென்று, இஸ்ரவேலின் புதிய ராஜா எங்கே பிறந்திருக்கிறார், நாங்கள் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டோம் என்று கேட்டார்கள்.

இதைக் கேட்டபோது ஏரோதுவும் எருசலேம் பட்டணத்தாரும் கலங்கினார்கள். எனவே ஏரோது தமது சமய ஆலோசகர்களின் இரகசியக் கூட்டத்தைக் கூட்டினான். யூதர்களின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜா எங்கே பிறப்பார் என்று வேதவசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது என்று அவன் அவர்களிடம் கேட்டான். அந்தக் குழந்தை பெத்லகேமில் பிறக்கும் என்று தீர்க்கதரிசனங்கள் சொல்லுவதாக அவர்கள் பதிலளித்தார்கள்.

ஏரோது சாஸ்திரிகளிடம் அவர்கள் எங்கே செல்ல வேண்டுமென்று கூறினான். ஆனால் அவர்கள் அரண்மனையைவிட்டுப் புறப்படுவதற்கு முன்பாக அவர்கள் எப்போது அந்த நட்சத்திரத்தை முதலாவதாகக் கண்டார்கள் என்று கேட்டான். குழந்தையின் வயதைக் கணக்கிடுவதற்காகவே அவன் இப்படிக் கேட்டான்.

சாஸ்திரிகள் பெத்லகேமை நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்த நட்சத்திரம் அவர்களை இயேசு வாழ்ந்த வீட்டுக்கு வழிநடத்தியது. சாஸ்திரிகள் அந்த வீட்டுக்குள் நுழைந்து, இயேசுவைப் பணிந்துகொண்டார்கள். அவர்கள் பொன், தூபவர்க்கம், வெள்ளைப் போளம் ஆகிய காணிக்கைகளை அவருக்குக் கொடுத்தார்கள். அவர்கள் தங்கள் தாய்நாட்டுக்குப் போகத் திரும்பிய போது, அவர்கள் ஒரு கனவு கண்டனர். ஏரோது கேட்டுக்கொண்டபடி எருசலேம் வழியாகத் திரும்பிச் செல்ல வேண்டாம் என்று அவர்கள் கனவில் எச்சரிக்கப்பட்டார்கள். அதனால் அவர்கள் வேறு வழியாக நாட்டுக்குத் திரும்பினார்கள்.

கர்த்தரிடமிருந்து யோசேப்புக்கும் ஒரு கனவு வந்தது. உடனடியாக மரியாளோடும் குழந்தையோடும் அந்த இடத்தைவிட்டுப் போகும்படி இந்தக் கனவு அவனை எச்சரித்தது. அவர்கள் எகிப்துக்குச் சென்று, கர்த்தரிடமிருந்து மறுவார்த்தை வரும் வரையில் அங்கே வசிக்க வேண்டும். ஏரோது குழந்தையைக் கொல்ல முயலுகிறான் என்று அவனுக்குச் சொல்லப்பட்டது. இது "எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" என்று தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாக நடந்தது.

ஏரோது உண்மையாகவே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட குழந்தையைக் கொல்ல முயன்றான். பெத்லகேம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இரண்டு வயதுக்கும் குறைந்த எல்லா ஆண் பிள்ளைகளையும் அவன் கொன்றுபோட்டான்.

ஏரோது மரித்தபிறகு இஸ்ரவேலுக்குத் திரும்ப வேண்டுமென்று யோசேப்புக்கு மற்றொரு கனவில் கட்டளை வந்தது. யோசேப்பு தேவனுக்குக் கீழ்ப்படிந்தான். அவன் யூதேயாவுக்கு வடக்கிலுள்ள கலிலேயா பிராந்தியத்துக்குத் திரும்பி, அங்கே நாசரேத்து என்ற பட்டணத்தில் வசித்தான்.

இந்த நாட்களில் யோவான்ஸ்நானன் என்பவன் யூதேயாவின் வனாந்தரங்களில் பிரசங்கித்து வந்தான். "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்ற செய்தியை அவன் பிரசங்கித்தான். யோவான்ஸ்நானன் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான். வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவனுக்கு உணவாயிருந்தது.

எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தான் நதியைச் சுற்றியிருந்த பகுதிகளில் இருந்தவர்களும் அவனிடம் சென்று, தங்கள் பாவத்தை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார்கள். அங்கே சமயத்தலைவர்களாகிய பரிசேயர்களும், சதுசேயர்களும்கூட அவனுடைய பேச்சைக் கேட்கும்படி வந்தார்கள். அவர்களை யோவான்ஸ்நானன் "விரியன்பாம்புக் குட்டிகளே" என்று அழைத்தான். ஏனென்றால், அவர்கள் தங்கள் பாவத்தைவிட்டு மனந்திரும்ப வேண்டும் என்பதை உணராமல், தங்கள் சமயப் பாரம்பரியங்களின்மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

யோவான்ஸ்நானன் பிரசங்கம்செய்தபோது, பரிசுத்த ஆவியினாலும் அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுப்பவர் வரப்போகிறார் என்று கூறினான். அவர் மக்களை இரண்டாகப் பிரித்து, தம்மில் விசுவாசம் வைப்பவர்களைத் தம்மோடு சேர்த்துக்கொண்டு, மற்றவர்களை அவியாத நெருப்பில் போடுவார் என்று அவன் கூறினான்.

இயேசு கலிலேயாவிலிருந்து யோவான்ஸ்நானின் மூலம் ஞானஸ்நானம் பெறும்படி யோர்தானுக்கு வந்தார். யோவான்ஸ்நானன் அதைத் தடுக்க முயன்றான். ஏனென்றால் தான் அதற்குத் தகுதியற்றவன் என்று அவன் உணர்ந்தான். ஆனால் இயேசு எல்லா நீதியும் நிறைவேறும்படி தான் ஞானஸ்நானம் பெற விரும்புவதாக வலியுறுத்தினார்.

இயேசு ஞானஸ்நானம் பெற்று தண்ணீரிலிருந்து கரையேறும்போது, வானம் திறப்பதை எல்லோரும் கண்டார்கள். பரிசுத்த ஆவியானவர் புறா வடிவில் அவர்மீது இறங்கினார். வானத்திலிருந்து தேவனுடைய சத்தம் "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்தது.

## நேர்முகக் கேள்விகள்

1. எப்படிப்பட்ட மனிதர்கள் குழந்தை இயேசுவைக் காண வந்தார்கள்? அவர்கள் எந்தப் பரிசுகளைக் கொண்டுவந்தார்கள்?
2. இந்த மனிதர்கள் முதலில் எந்தப் பட்டணத்துக்குச் சென்று, யாரோடு பேசினார்கள்?
3. ஏன் யோசேப்பு எகிப்துக்கு ஓடிப்போக வேண்டுமென்று தேவன் அவனை எச்சரித்தார்?
4. ஏரோதுவின் மரணத்துக்குப் பிறகு யோசேப்பு எங்கே சென்றான்?
5. யோவான்ஸ்நானன் எங்கே பிரசங்கம் செய்தான்?
6. அவன் எப்படித் தோற்றமளித்தான்?
7. மக்களுக்கு அவன் கொடுத்த செய்தி என்ன?
8. தங்கள் பாவங்களை அறிக்கையிட்ட மக்களுக்கு அவன் என்ன செய்தான்?
9. யோவான்ஸ்நானன் ஏன் பரிசேயர்களையும், சதுசேயர்களையும் "விரியன்பாம்புக் குட்டிகளே" என்று அழைத்தான்?
10. தன்னைவிட மேலான ஒருவர் வருவார் என்று யோவான்ஸ்நானன் பிரசங்கித்தான். அவர் உலகத்தின் மக்களைப் பிரிப்பார் என்று அவன் கூறினான். ஏன் அப்படி?
11. யோவான்ஸ்நானன் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெறும்படி கலிலேயாவிலிருந்து வந்தது யார்?
12. யோவான்ஸ்நானன் தான் தகுதியற்றவன் என்று உணர்ந்தாலும், அவன்தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்று இயேசு வலியுறுத்தினார். இயேசு கொடுத்த காரணம் என்ன?
13. இயேசு நீரிலிருந்து எழுந்தபோது நடந்தது என்ன?

# ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 2

## மத்தேயு 2 - 3

1. நாம் தேவனுக்கு முழுவதுமாகக் கீழ்ப்படியும்போதுமட்டுமே, நமது வாழ்க்கைக்கான தேவனுடைய சிறப்பானதை அனுபவிக்க முடியும். பல காரியங்களைச் செய்யும்படி தேவன் யோசேப்பிடம் கூறினார், மற்றபடி அவன் அந்தக் காரியங்களைச் செய்திருக்க மாட்டான். அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து மரியாள் கர்ப்பவதியாக இருந்தபோதிலும், அவளை மணந்துகொண்டான். அவளுடைய கர்ப்பத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும் அவன் தேவன்மீது நம்பிக்கை வைத்தான். பிறகு அவர்கள் பெத்லகேமில் வசித்துவந்தபோது, எகிப்துக்குச் செல்லும்படி தேவன் அவர்களிடம் கூறினார். எகிப்து ஒரு அந்நிய நாடாகும், அவர்கள் வித்தியாசமான பாஷையைப் பேசினார்கள். அவர்களுடைய வாழ்க்கை முறை வித்தியாசமாக இருந்தது, அவர்கள் பொய்யான கடவுள்களை வணங்கினார்கள். மனைவியையும் சிறு குழந்தையையும் அழைத்துக்கொண்டு ஒருவர் இப்படிச் செல்லுவது கடினமான காரியமாகும். என்றாலும், அவன் கீழ்ப்படிவதைத் தெரிந்துகொண்டான். இதன் விளைவாக, இயேசுவின் உயிர் காப்பாற்றப்பட்டது.

   தேவன் யோசேப்பின் வாழ்க்கைக்கு ஒரு சிறப்பான திட்டத்தை வைத்திருந்ததுபோல, நம் ஒவ்வொருவருக்காகவும் தனிப்பட்ட, சிறப்பான திட்டத்தை வைத்திருக்கிறார். நாம் நமது தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே, அவர் நம்மை அறிந்து, நமக்கு ஒரு விசேஷித்த திட்டத்தை உருவாக்கியிருக்கிறார் என்று வேதாகமம் சொல்லுகிறது. நமது வாழ்க்கையிலும், நமது பிள்ளைகளுடைய வாழ்க்கையிலும் தேவன் நமக்கு வைத்திருக்கும் சிறப்பானதை நாம் அனுபவிக்க விரும்புவோமானால், அவர் நமக்குக் கொடுத்திருக்கும் அறிவுரைகளுக்குக் கவனமாகக் கீழ்ப்படிய வேண்டும். நாம் ஜெபிக்கும்போதும், தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போதும், அவர் நம்மோடு பேச விரும்புகிறார் என்று வேதாகமம் சொல்லுகிறது. அவர் நம்மைத் தம்மோடுகூட ஒரு முழுமையான, அபரிமிதமான வாழ்க்கைக்குள் வழிநடத்த விரும்புகிறார். நாம் ஜெபித்து, தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போது, பலமுறை அவர் நம்மோடு நேரடியாகப் பேசுகிறார். குறிப்பான சூழ்நிலைகள், திட்டவட்டமான மனோபாவங்கள், திட்டவட்டமான தீர்மானங்கள் இவைகளைக் குறித்து அவர் நம்மோடுகூட இடைபடுகிறார். காலம் வரும்போது, நாமும் யோசேப்பைப் போல ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கும். அப்போது சூழ்நிலை கடினமாக இருந்தாலும், தேவனுக்குக் கீழ்ப்படிவதையே நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

   *உங்கள் வாழ்க்கையில் குறிப்பான ஒன்றைக் குறித்து தேவன் உங்களோடு பேசிக்கொண்டிருக் கிறாரா? உங்கள் வாழ்க்கையில் மாற்றுவதற்குக் கடினமான ஒன்றை மாற்றும்படி அவர் உங்களிடம் கூறுகிறாரா? அப்படியிருக்குமானால், உங்களுக்கு விருப்பமானால் அதைக் குழுவினரோடு பகிர்ந்துகொள்ளுங்கள். பிறகு ஒவ்வொரு நபரும் நோட்டுப் புத்தகத்தில் உங்களுடைய பெயருக்குக் கீழாக இதைக் குறிக்க வேண்டும். அடுத்த வாரம் முழுவதும் ஒவ்வொரு நாளும் இதை நினைவுபடுத்தி, ஜெபிக்க வேண்டும். உங்கள் வாழ்க்கைக்கான தமது திட்டத்துக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார், அதற்கான பலத்தை அவர் கொடுப்பார்.

2. இயேசு உயிர்த்தெழுந்த பிறகு, அவர் பரத்துக்கேறுவதற்கு முன்பாக, அவரைப் பின்பற்றும் நம் எல்லோருக்கும் ஒரு கட்டளையைக் கொடுத்திருக்கிறார். இயேசு பரலோகத்துக்குச் செல்லுமுன்பாக அவருடைய இறுதி வார்த்தைகளைப் பார்ப்போம்: “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.” இந்த ஆய்வில்

பின்னர் நாம் மற்றொருவருக்கு இயேசுவைப்பற்றிக் கூறுவது எப்படி என்று பார்ப்போம். ஆனால் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும்படி நாம் செய்ய வேண்டிய ஒரு காரியம் உண்டு. நாம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும்.

- ❖ ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் முன்மாதிரிக்குக் கீழ்ப்படியும் ஒரு எளிய செயலாகும். இது பயபக்தியான ஒருவரோடுகூட தண்ணீருக்குள் சென்று, சிறிது நேரம் மூழ்கி, மறுபடியும் திரும்ப எழுவதாகும்.

- ❖ இயேசு குழந்தையாக இருக்கும்போது, அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட வில்லை.லூக்காசுவிசேஷத்தில்,இயேசுஒருகுழந்தையாகஇருந்தபோதுஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்று வாசிக்கிறோம். அப்போது ஆசாரியன் அவரையும் அவருடைய பெற்றோரையும் ஆசீர்வதித்தார். ஆனால் இது ஞானஸ்நானம் அல்ல.

- ❖ அவருடைய ஞானஸ்நானம் அவரே தெரிந்துகொண்ட ஒரு காரியமாகும். அவருடைய பெற்றோர் அவருக்காகத் தீர்மானிக்கவில்லை. கிறிஸ்துவின் எடுத்துக்காட்டை நாம் எல்லோரும் பின்பற்றி, ஒரு பயபக்தியுள்ள நபரால் ஞானஸ்நானம் பெறும்படி முன்னால் செல்ல வேண்டும்.

- ❖ இது ஒரு குறிப்பிட்ட சபைப்பிரிவோடு உங்களை ஒன்றுபடுத்தும், சமயப்பிரகாரமான சடங்கு அல்ல. இது ஆத்துமாவிலுள்ள பாவத்தை அகற்றும் ஒரு ஆவிக்குரிய அனுபவமும் அல்ல. இது கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கான வெளிப்படையான ஒரு அடையாளமாகும். ஞானஸ்நானம் கிறிஸ்துவின் அடக்கம்பண்ணப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாக இருக்கிறது என்று வேதாகமம் போதிக்கிறது. நாம் ஞானஸ்நானம் பெறும்போது கிறிஸ்துவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு ஒன்றுபடுகிறோம்.

*ஞானஸ்நானத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி ஞானஸ்நானம் பெறுவது கடினமான காரியம் என்று நினைக்கிறீர்களா? உங்களுக்கு ஞானஸ்நானம் தேவைப்படுகிறதா? நீங்கள் ஞானஸ்நானம் பெற விரும்புகிறீர்களா?

# கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "கிறிஸ்துவின் சோதனை" - பாடம் 3

## மத்தேயு 4

"மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" மத்தேயு 4:4.

**மறு ஆய்வு**

1. இயேசு இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார். அதற்கு "தேவன் ____________________" என்று அர்த்தமாகும்.
2. தாம் இறுதியில் உலகத்துக்குத் திரும்பி வரும்போது அது ____________________ பாய்வதுபோல இருக்கும் என்று இயேசு சொல்லியிருக்கிறார்.
3. தாம் உலகத்துக்குத் திரும்பி வரும்போது, எவருமே மெய்யான கிறிஸ்து யார் என்று குழப்பமடைய மாட்டார்கள், ஏனென்றால் தாம் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் ____________________ மேல் வருவதை மக்கள் காண்பார்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார்,
4. தாம் வருவதற்கு முன்பாகப் பலர் கிறிஸ்து என்று சொல்லி, அற்புதமான தந்திரங்களைச் செய்வார்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார். இந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகளால் நாம் ____________________ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
5. இயேசு கிறிஸ்துவின் காரணமாக மக்கள் நம்மைத் துன்புறுத்தும்போது நம்மை நாமே ____________________ எண்ண வேண்டுமென்று இயேசு சொல்லியிருக்கிறார். ஏனென்றால் நாம் நமது பரிசை இழந்துபோக மாட்டோம். தாம் இந்த மக்களை ____________________ நடத்தப் போவதாக அவர் சொல்லியிருக்கிறார்.
6. தாம் மறுபடியும் உலகத்துக்குத் திரும்புவதை ____________________ மட்டுமே அறிந்திருக்கிறார் என்று இயேசு சொல்லியிருக்கிறார்.
7. வனாந்தரத்தில் மனந்திரும்புதலின் செய்தியைப் பிரசங்கித்த ____________________ ஒட்டக மயிர் ஆடையும் தரித்து, வெட்டுக்கிளிகளை உணவாகக் கொண்டிருந்தான்.
8. பலர் யோவான்ஸ்நானனால் ஞானஸ்நானம் பெறும்படி வந்து தங்கள் ____________________ அறிக்கையிட்டார்கள்.
9. ஒருவர் வந்து பூமியின் மக்களைப் பிரிப்பார் என்று யோவான்ஸ்நானன் கூறினான். அவரைப் புறக்கணிக்கிறவர்கள் அவியாத ____________________ தள்ளப்படுவார்கள்.
10. இயேசு வந்து தமக்கு ____________________ கொடுக்கும்படி யோவான்ஸ்நானனிடம் கேட்டார்.
11. இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது ____________________ புறா வடிவத்தில் இறங்கினார். ____________________ வானத்திலிருந்து பேசினார்.
12. இயேசு பரத்துக்குச் செல்லுவதற்கு முன்பு தமது இறுதி வார்த்தைகளில், தமது சீஷர்களிடம் கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளுபவர்களுக்கு ____________________ கொடுக்கும்படி கட்டளையிட்டார்.
13. நாம் ____________________ பெற வேண்டும், அது நமது பாவங்களை ____________________ என்பதற்காக அல்ல, அது ____________________ நம்மை ஒருமுகப்படுத்தும் ஒரு அடையாளமாக இருக்கிறது.
14. ஞானஸ்நானம் இயேசுவின் ____________________ , ____________________ அடையாளமாக இருக்கிறது.

இயேசுவின் ஞானஸ்நானத்துக்குப் பிறகு பரிசுத்த ஆவியானவர் அவரை வனாந்தரத்துக்கு இட்டுச் சென்றார். அங்கே அவர் பிசாசினால் சோதிக்கப்பட்டார். அங்கே இயேசு நாற்பது நாட்கள் இரவும் பகலும் உபவாசம் இருந்தார். நாற்பது நாட்களுக்குப் பிறகு அவருக்குப் பசியுண்டாயிற்று. இந்த நேரத்தில் சாத்தான் அவரிடத்தில் வந்து "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்று அவரைச் சோதித்தான். இயேசு பழைய ஏற்பாட்டிலுள்ள ஒரு வசனத்தைக் கொண்டு அவனுக்குப் பதிலளித்தார்: "மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே."

அடுத்து பிசாசானவன் அவரைத் தலைநகராகிய எருசலேமுக்கு இட்டுச் சென்று, தேவாலயத்து உப்பரிகையில் அவரை நிறுத்தினான். "நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது" என்று அவன் கூறினான். இயேசுவோ மறுபடியுமாக வேதாகமத்திலிருந்து ஒரு வசனத்தை எடுத்து அவனுக்குப் பதிலளித்தார்: "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே."

மறுபடியுமாகப் பிசாசானவன் இயேசுவை ஒரு உயர்ந்த மலையின்மீது அழைத்துச் சென்றான். அங்கிருந்து இருவரும் பூமியின் ராஜ்யங்களையும், அவைகளின் மகிமையையும் கண்டார்கள். சாத்தான் இயேசுவிடம் "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்" என்று கூறினான். இயேசுவோ "அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்று பதிலளித்தார். அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்த சாத்தான் அவரை விட்டுச் சென்றான். தேவதூதர்கள் வந்து இயேசுவுக்குப் பணிவிடை செய்தார்கள்.

## நேர்முகக் கேள்விகள்

1. இயேசு சோதிக்கப்படும்படி பரிசுத்த ஆவியானவர் அவரை எங்கே கொண்டுசென்றார்?
2. சாத்தான் அவரைச் சோதிக்கும்படி வருவதற்கு முன்பாக இயேசு நாற்பது நாட்களாக என்ன செய்தார்?
3. முதல் இரண்டு சோதனைகளில் இயேசு யாரென்று தம்மை நிரூபிக்க வேண்டுமென்று சாத்தான் அவரைச் சோதித்தான்?
4. முதலாவது சோதனையில், சாத்தான் கற்களை எவைகளாக மாற்றும்படி சோதித்தான்?
5. முதல் சோதனையில் இயேசு எப்படிச் சாத்தானை மேற்கொண்டார்?
6. இரண்டாவது சோதனையில், சாத்தான் இயேசுவை எருசலேமின் ஆலயத்தின் உச்சியில் கொண்டு சென்றபோது அவர் என்ன செய்ய வேண்டுமென்று சோதித்தான்?
7. இரண்டாவது சோதனையில் இயேசு எப்படிச் சாத்தானை மேற்கொண்டார்?
8. மூன்றாவது சோதனையில், இயேசு ஒரு காரியத்தைச் செய்தால் உலகத்தின் ராஜ்யங்களைக் கொடுப்பதாகச் சாத்தான் கூறினான். இயேசு என்ன செய்ய வேண்டுமென்று சாத்தான் விரும்பினான்?
9. மூன்றாவது சோதனையில் இயேசு எப்படிச் சாத்தானை மேற்கொண்டார்?
10. இயேசு சாத்தானை விரட்டிய பிறகு அவருக்குப் பணிவிடை செய்யும்படி வந்தது யார்?

# ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 3

## மத்தேயு 4

**1.** நாம் நமது வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்த பிறகும் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். கிறிஸ்துவைப்போலல்லாமல் நாம் சோதிக்கப்படுவதற்கு வனாந்தரத்துக்குச் செல்ல வேண்டியதில்லை. நாம் பிசாசினால் மட்டுமின்றி, நமது சொந்த இச்சைகளாலும் சோதிக்கப்படுகிறோம் என்று வேதாகமம் கூறுகிறது (யாக்கோபு 1:14). நமது இருதயத்தில் எப்போதுமே நல்லதைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துக்கும், தீயதைச் செய்யும் விருப்பத்துக்கும் இடையில் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது. "எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்... ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்" ரோமர் 7:15, 19.

2. இப்போது உங்களுக்குள் சுபாவங்கள் இரண்டு இருக்கிறபடியால் நீங்கள் சோதனைகளை அனுபவிப்பீர்கள். இவைகளில் ஒன்று மாம்சத்தின் ஆவியாகும். மற்றொருவர் உங்களுக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர். கலாத்தியர் 5:16-17 வசனங்கள் "பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது" என்று சொல்லுகின்றன. வாழ்க்கையின் பெரிய காரியங்களில் மட்டுமின்றி சிறிய காரியங்களிலும்கூட ஒவ்வொரு நாளும் உங்கள் சித்தத்துக்கும் தேவனுடைய சித்தத்துக்கும் இடையில் போராட்டம் இருக்கும்.

3. இயேசு செய்தது போல, தேவனுடைய வார்த்தையின் வல்லமையின் மூலமாக நம்மால் சோதனையை மேற்கொள்ள முடியும். "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" என்று எபிரெயர் 4:12 வசனம் சொல்லுகிறது. *இந்த வசனத்தைப் பலமுறை வாசியுங்கள். இந்த வசனத்தின் அர்த்தம் என்ன என்று குழு உறுப்பினர்களிடம் கேளுங்கள்.*

தேவனுடைய வார்த்தை வெறுமனே ஆலோசனைதரும் புத்தகமாக மட்டும் இருக்கவில்லை. இந்த ஜீவனுள்ள வார்த்தைகளின் மூலமாகத் தேவன் தனிப்பட்ட முறையில் நம் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் பேசுகிறார். தேவன் மட்டுமே அறிந்த நமது ஆத்துமாவின் ஆழத்தை இது துளைத்துச் செல்லுகிறது.

கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியம் ஒவ்வொரு நாளும் பிதாவானவரோடு நேரம் செலவழிப்பதாகும். தேவனுடைய வார்த்தை நம்முடைய பலத்தின் ஆதாரம் என்று சாத்தான் அறிந்திருக்கிறபடியால், அதிலிருந்து நம்மைப் பிரிக்க அவன் எல்லாவற்றையும் செய்வான். நாம் பரபரப்பாகச் செயல்பட வேண்டியிருக்கிறது, நாம் ஏற்கெனவே வேதாகம ஆய்வில் ஈடுபட்டிருக்கிறோம், தூக்கம் வருகிறது, வேதாகமத்தைப் புரிந்துகொள்ளுவது கடினமாக இருக்கிறது, போன்ற இலட்சக்கணக்கான சாக்குப்போக்குகளை அவன் சொல்லுவான். ஆனால் இந்த எண்ணங்கள் பொய்கள் என்பதை நாம் உணர வேண்டும். ஒவ்வொரு நாளும் ஜெபத்திலும், தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும் நேரம் செலவழிப்பதை நமது முன்னுரிமையாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

பின்பற்றுவதற்கு எளியதொரு திட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

1. பிதாவானவரிடத்தில் நீங்கள் அவரிடத்தில் எவ்வளவாக அன்புகூருகிறீர்கள் என்பதைச் சொல்லி, உங்கள் தனித்திருக்கும் வேளையைத் துவங்குங்கள். அவர் எவ்வளவு அற்புதமானவர் என்பதற்காக அவரைத் துதியுங்கள்.

2. உங்கள் வாழ்க்கையில் அவர் செய்துள்ள காரியங்களுக்காகவும், ஜெபத்துக்குப் பெற்றிருக்கும் பதில்களுக்காகவும் அவருக்கு நன்றி கூறுங்கள்.

*உங்கள் ஜெப நோட்டுப் புத்தகத்தில் "நன்றி" என்ற தலைப்பில் ஒரு பக்கத்தை ஒதுக்கி, தேவன் உங்கள் வாழ்க்கையில் செய்யும் காரியங்களை எழுதிவைப்பது நல்லதாகும். எப்போதுமே தேதியையும் குறிப்பிட மறவாதீர்கள். இப்படியாகத் தேவன் உங்கள் வாழ்க்கையில் எப்படிக் கிரியைசெய்து வருகிறார் என்பதைக் கண்டறிய முடியும்.

3. மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்: உங்கள் வேதாகம ஆய்வுக் குழுவில் இருப்பவர்கள், குடும்பத்தார், உங்கள் நண்பர்கள், குறிப்பாக இன்னும் கிறிஸ்துவை அறியாதவர்களின் சிறப்பான தேவைகளுக்காக ஜெபியுங்கள். நீங்கள் அதிகமான நபர்களுக்காக ஜெபிக்க வேண்டியிருக்குமானால், வாரத்தில் ஒவ்வொரு நாளும் யாருக்காக ஜெபிப்பது என்பதை நோட்டுப் புத்தகத்தில் எழுதி, வாரம் ஒருமுறை ஒவ்வொருவருக்காகவும் ஜெபியுங்கள்.

   எடுத்துக்காட்டாக,

| திங்கள் | செவ்வாய் |
|---|---|
| லலிதா அத்தை | பாட்டி |
| டேவிட் மாமா | அம்மா |
| ரேச்சல் | அப்பா |
| ஜாண் டேவிட் | போதகர் ஜாண் |

*பாடத்தை நிறுத்திவிட்டு, இப்போதே இதைச் செய்யத் துவங்குவது உதவியாக இருக்கும். இப்படியாக ஒவ்வொருவரும் இப்போதே தங்களுடைய ஜெப வேளையைத் துவங்க முடியும்.

4. தேவனுடைய வார்த்தையை வாசித்து தியானியுங்கள். மற்றப் புத்தகங்களை வாசிப்பதுபோல நாம் வேதாகமத்தை வாசிக்கக் கூடாது, அதைத் தியானிக்க வேண்டும் என்று வேதவசனம் சொல்லுகிறது.

   அதாவது நாம் இப்படிச் செய்ய வேண்டும்:

   - ♦ அதை மெதுவாக வாசிக்க வேண்டும்.
   - ♦ வார்த்தைகளின் அர்த்தத்தை ஆழமாக யோசித்துப் பார்த்து, பலமுறை அதை வாசிக்க வேண்டும். தேவன் நமக்குச் சொல்ல விரும்பும் சத்தியத்தைப் புரிந்து கொள்ளுவதற்கு முன்பாக நாம் பலமுறை வாசிக்க வேண்டியிருக்கும்.
   - ♦ தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தில் உங்களுடைய சொந்தப் பெயரைப் பொருத்திப் பாருங்கள். "உன் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக" என்று வசனம் கூறினால் "மலர், உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக" என்று அதை உங்களுக்குரியதாக்கி, வாசியுங்கள்.
   - ♦ இந்த வசனத்தைக் கொண்டு தேவனிடம் ஜெபியுங்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி கூறி, விசேஷித்த தேவைகளுக்காக ஜெபியுங்கள். எடுத்துக்காட்டாக, "தேவனே, என் அப்பாவுக்காகவும், அம்மாவுக்காகவும் உமக்கு நன்றி. தேவனே, என்னுடைய அப்பா அருகே இல்லாதபோது, நீர் என்னுடைய ஒவ்வொரு தேவைகளையும் சந்திக்கும் பரமபிதாவாக இருப்பதற்காக உமக்கு நன்றி."

நமது இப்போதைய வாழ்க்கையைக் குறித்துத் தேவன் நமக்குத் தெரிவிக்க விரும்பும் பல ஆவிக்குரிய சத்தியங்கள் வேதாகமத்தில் இருக்கின்றன. தேவனுடைய வார்த்தையை எப்படித் தியானிப்பது என்பதற்கான எடுத்துக்காட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*இப்போது நாம் படித்த மத்தேயு 5ஆம் அதிகாரத்தோடு நாம் துவங்குவோம். *எல்லோரும் முதல் மூன்று அல்லது நான்கு வசனங்களை வாசிக்க நேரம் கொடுங்கள். ஒருவரால் வாசிக்க முடியாவிட்டால், தலைவர் எந்த விளக்கமும் கொடுக்காமல் இந்த வசனங்களை அவருக்குப் பல முறை வாசித்துக் காட்ட வேண்டும்.*

*இப்போது நாம் ஒவ்வொருவரும் இந்த வசனங்களின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முயலுவோம். இந்த வசனங்களில் நமது பெயரைச் சேர்க்க முடியுமா என்று பார்ப்போம். தேவ ஆவியானவர் உங்களோடு பேசுவதை அனுமதிக்கப் பயப்படாதிருங்கள். இங்கே ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம், ஆனால் இது மட்டுமே இந்த வசனத்தை ஒருவருடைய வாழ்க்கையில் செயல்படுத்துவதற்கு ஒரே வழி என்று கூற முடியாது. இந்த வசனங்களை நான் வாசித்தபோது ஆண்டவர் என்னிடம் இந்த வார்த்தைகளைப் பேசினார்:

வசனம் 3: "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது."
(ஆசிரியருடைய "ஆவிக்குரிய சத்தியத்துக்கு" எடுத்துக்காட்டு). வச. 3. நான் ஆவியில் எளிமையுள்ளவளாக இருந்தால், தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவேன். ஆண்டவரே, நான் ஆவியில் எளிமையுள்ளவளாக இருக்க எனக்கு உதவும். நான் பெருமையுள்ளவளாக, என்னுடைய சொந்த ஆவியினால் நிறைந்தவளாக இருக்க விரும்பவில்லை. எனது வாழ்க்கையில் நீர் செய்துவரும் செயல்களுக்காக, ஆண்டவரே, உமக்கு நன்றி. நான் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவேன் என்பதற்காக, ஆண்டவரே, உமக்கு நன்றி. நான் மெய்யாகவே பாக்கியமுள்ளவளாக இருக்கிறேன்.

வசனம் 4: "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்."
(ஆசிரியருடைய "ஆவிக்குரிய சத்தியத்துக்கு" எடுத்துக்காட்டு). வச. 4. துயரப்படுவதில் பாக்கியமுள்ளவளாக இருப்பதைப் புரிந்துகொள்ளுவது எனக்குக் கடினமாகவே இருக்கிறது. ஏனென்றால் சோகமான வேளைகளிலேயே நாம் துயரப்படுகிறோம். ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவளாக, நான் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டவளாக இருக்கிறேன் என்பதை அறிந்து நன்றியுள்ளவளாக இருக்கிறேன். ஏனென்றால் கிறிஸ்துவில் நம்பிக்கை வைப்பவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. தேவன் நமக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறார் என்பது மெய்யாகவே ஆறுதலாக இருக்கிறது. ஆண்டவரே, என்னுடைய தாயின் மரணத்தின்போது எனது சொந்த வாழ்க்கையில் நான் துயரத்தை அனுபவித்தபோது நீர் எனக்கு ஆறுதலாக இருந்ததற்காக உமக்கு நன்றி. எனது துக்க வேளைகளில் நேரடியாக எனக்கு ஆறுதலளிக்கும்படி எனது வாழ்க்கையில் நீர் கொடுத்த பயபக்தியுள்ள மக்களுக்காக உமக்கு நன்றி கூறுகிறேன். எனது ஆத்துமாவில் உமது பரிசுத்த ஆவியானவரின் மூலமாக நான் பெறும் ஆறுதலுக்காக உமக்கு நன்றி கூறுகிறேன். ஆம் ஆண்டவரே, ஒரு விசுவாசியாக நான் துயரப்படும்போது, பாக்கியமுள்ளவளாக இருப்பதை என்னால் காண முடிகிறது. ஆண்டவரே, நான் உம்மிடத்தில் அன்புகூருகிறேன். நீர் எனக்காக அக்கறை கொண்டிருக்கிறீர்.

தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பது மட்டுமே முக்கியமானதாகும். அதில் எந்த விசேஷித்த சூத்திரமோ, சிறப்பான வார்த்தைகளோ அல்லது சிறப்பான செயல் முறையோ எதுவுமில்லை. அந்த வார்த்தைகள் உங்கள் ஆத்துமாவுக்குள் ஆழமாகப் பதிய இடம் கொடுங்கள். அவை உங்கள் வாழ்க்கையைத் துளைக்கும்போது, தேவன் உங்களுடைய ஆழமான பகுதிகளுக்குள் பேசுவார்.

தொடர்ந்து நாம் இதைச் செய்துவரும்போது, ஒவ்வொரு வகையிலும் நாம் இன்னுமதிகமாகக் கிறிஸ்துவைப் போலாவோம். நம்மால் சோதனையை எதிர்த்து நிற்க முடிகிறது என்பது

மட்டுமல்லாமல், நமது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் இன்னுமதிகமாக அன்பு காட்டுகிறோம், இன்னுமதிகமாகப் பயபக்தியோடு நடக்கிறோம். தனிப்பட்ட முறையில் தேவனை அறிவதே வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் திறவுகோலாகும்.

*உங்கள் ஜெப நோட்டுப் புத்தகத்தின் இரண்டாவது பகுதியைத் தனியாகப் பிரிக்குமாறு நான் ஆலோசனை கூறுகிறேன். இது தியானத்துக்குரிய பகுதியாகும். ஒவ்வொரு நாளும் நீங்கள் வேதாகமத்தைத் திறக்கும்போது, அந்தத் தேதியைக் குறியுங்கள். குறைந்தபட்சமாக தேவன் உங்களோடு பேசும் ஒரு சத்தியத்தையாவது எழுதிவையுங்கள். சில வேளைகளில் நீங்கள் உங்கள் சிந்தனைகளை எழுதிவைக்கும்போது, தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பது எளிதாக இருக்கலாம். அல்லது பின்பு ஒரு வேளையில் தேவன் உங்கள் இருயத்தில் பேசும் விலைமதிப்பற்ற வார்த்தைகளை எழுதி, வாசிப்பது பயனுள்ளதாக இருக்கலாம். இது உங்களுக்கும் உங்கள் எஜமானருக்கும் இடையிலான தனிப்பட்ட, விலைமதிப்பற்ற கணமாகும்.

*ஒரு வாரத்துக்கு நீங்களும் உங்கள் குழுவிலுள்ள ஒவ்வொருவரும், தினமும் பிதாவோடு குறைந்தபட்சமாகப் பதினைந்து நிமிடங்களைச் செலவழிப்பதில் உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி நான் உங்களுக்கு அறைகூவல் விடுக்கிறேன். கூடுமானால், ஆண்டவர் உங்களோடு பேசிய ஒரு காரியத்தையாவது ஒவ்வொரு நாளும் எழுதிவையுங்கள். உங்களால் வாசிக்க முடியாவிட்டால், அடுத்த வாரம் முழுவதும் தினசரி ஒரு வசனத்தை உங்களுக்கு வாசித்துக் காட்டும்படி ஒருவரை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தை உங்கள் இருதயத்தைத் துளைக்கும்படி நீங்கள் அனுமதித்தால் என்ன நடக்கிறது என்பதைப் பாருங்கள்.

*நாம் துவங்கிய இந்த அதிகாரத்தை எல்லோரும் தொடர்ந்து வாசிப்போமாக. ஒரு நாளில் ஒரு அதிகாரத்தை முடித்துவிட வேண்டுமென்று அவசரப்பட வேண்டாம். நீங்கள் இந்த அதிகாரத்தை முடித்துவிட்டால் அடுத்த அதிகாரத்துக்கும், பிறகு அதற்கடுத்த அதிகாரத்துக்கும் செல்லுங்கள். அடுத்த வாரம் திரும்பி வரும்போது, தேவனுடைய வார்த்தையைத் தியானம் செய்யும்போது கிடைத்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "மனிதரைப் பிடிப்பவர்களிடமிருந்து பயத்தை விரட்டுதல்" - பாடம் 4

## மத்தேயு 4 - 8

"அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று" மத்தேயு 8:26.

**ஒரு தலைவராக உங்கள் குழுவினரிடம், அவர்களால் ஒவ்வொரு நாளும் வேதாகமத்தை வாசித்து, ஜெபிக்க முடிந்ததா என்று கேளுங்கள். ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளியுங்கள். அவர்களுடைய முயற்சிகளை ஊக்குவியுங்கள்.*

**மேலும், இந்த வார ஆய்வின் இயல்பின் காரணமாக, ஆய்வின் முடிவுக்குப் பதிலாகத் துவக்கத்திலேயே உறுப்பினர்கள் தங்கள் ஜெப விண்ணப்பம் மற்றும் பரிந்துரை ஜெப வேளைகளை வைத்துக்கொள்ளுவது முக்கியமாகும்.*

**மறு ஆய்வு**

1. இயேசு இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித் திருக்கிறார். அதற்கு "தேவன் ____________________" என்று அர்த்தமாகும்.
2. ஒலிவமலையில் இயேசு தமது இரண்டாம் வருகையைப்பற்றித் தமது சீஷர்களுக்குப் போதித்தபோது, அவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளினாலோ அல்லது தங்களைக் கிறிஸ்து என்று சொல்லிக்கொண்டு அற்புதமான காரியங்களைச் செய்கிறவர்களினாலோ ____________________ எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கூறினார்.
3. தாம் உலகத்துக்குத் திரும்பி வரும்போது, எல்லோரும் தாம் வல்லமையோடும், மிகுந்த மகிமை யோடும் ____________________ மேல் வருவதைக் காண்பார்கள் என்று இயேசு சொல்லியிருக் கிறார்,
4. தாம் எப்போது உலகத்துக்குத் திரும்புவேன் என்பதை ____________________ மட்டுமே அறிந்திருக்கிறார் என்று இயேசு சொல்லியிருக்கிறார்.
5. தங்கள் ____________________ விட்டு மனந்திரும்பிய பலருக்கு யோவான்ஸ்நானன் வனாந்தரத்தில் ஞானஸ்நானம் கொடுத்தான்.
6. கிறிஸ்து பரத்துக்கேறுவதற்கு முன்பாகத் தமது சீஷர்கள் எல்லோரும் ____________________ என்று கட்டளை கொடுத்தார்.
7. ஒருவர் வந்து பூமியின் மக்களைப் பிரிப்பார் என்று யோவான்ஸ்நானன் கூறினான். அவரைப் புறக்கணிக்கிறவர்கள் அவியாத ____________________ தள்ளப்படுவார்கள்.
8. இயேசுவின் முதல் இரண்டு சோதனைகளில், அவர் ____________________ என்று நிரூபிக்கக்கூடிய காரியங்களை அவர் செய்யும்படி சாத்தான் அவரைத் தூண்டினான்.
9. மூன்றாவது சோதனையில் சாத்தான் அவரிடம் அவர் தன்னைப் பணிந்து ____________________ கூறினான்.
10. இயேசு மூன்று முறையும் ____________________ ____________________ வார்த்தையைப் பயன்படுத்தி அவனுக்குப் பதிலளித்தார்.
11. நாம் தேவனை இன்னும் சிறப்பாக அறிந்துகொள்ள வேண்டுமானால், ஒவ்வொரு நாளும் அவரோடுகூட ____________________ செலவழிக்க வேண்டும்.

12. உங்களுக்குள் ஒன்றுக்கொன்று போரிடும் இரண்டு இயல்புகள் யாவை? ____________________ ஆவி, மற்றும் ____________________ ஆவியானவர்.

13. நாம் சோதனையை மேற்கொள்ள வேண்டுமானால், ஒவ்வொரு நாளும் ____________________ தனிமையில் நேரம் செலவழிக்க வேண்டும்.

14. நாம் இன்னுமதிகமாகக் கிறிஸ்துவைப்போலாக விரும்பினால், அவரோடுகூட ____________________ தனிமையில் நேரம் செலவழிக்க வேண்டும்.

இயேசு வனாந்தரத்திலிருந்து திரும்பிவந்த பிறகு தமது பொது ஊழியத்தைத் துவங்கினார். கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள பகுதியில் அவர் ஊழியம் செய்தார். கப்பர்நகூம் பட்டணம் அவர் ஊழியத்துக்கு மையமாக இருந்தது. யோவான்ஸ்நானன் பிரசங்கித்த அதே செய்தியை அவர் இந்தப் பகுதியில் பிரசங்கித்தார்: "மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது."

சீமோன் பேதுருவும், அந்திரேயாவும் இயேசுவினால் அழைக்கப்பட்ட முதல் இரு சீஷர்களாவர். இந்த இரண்டு சகோதரர்களும் மீன்களைப் பிடிக்கும்படியாகக் கலிலேயாக் கடலில் வலைகளை வீசிக்கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களை அழைத்து, அவர்களிடம் "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று கூறினார்.

தொடர்ந்து சென்ற இயேசு தங்கள் மீன்பிடி படகுகளில் அமர்ந்து வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்த ஒரு தகப்பனையும், அவனுடைய இரண்டு குமாரர்களையும் கண்டார். அந்த இரண்டு குமாரர்களும் தம்மைப் பின்பற்றும்படி அவர் அழைத்தார். யாக்கோபு, யோவான் என்பதே அவர்களுடைய பெயர்கள், அவர்களுடைய தகப்பனின் பெயர் செபெதேயு.

இயேசு இந்தப் பகுதிகள் முழுவதிலும் சுற்றித்திரிந்து, யூத ஜெப ஆலயங்களில் ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார், எல்லா வகைப்பட்ட நோய்களினாலும் பாதிக்கப்பட்டிருந்தவர்களைக் குணமாக்கினார். அவருடைய புகழ் எங்கும் பரவியபடியால், அண்டை நாடாகிய சீரியா நாட்டிலிருந்தும்கூட மக்கள் குணமடையும்படி அவரிடம் வந்தார்கள்.

இயேசு திரளான மக்கள் தம்மைப் பின்பற்றுவதைக் கண்டபோது, தமது சீஷர்களை அழைத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட மலையின்மீது ஏறிச் சென்றார். அங்கே அமர்ந்துகொண்ட அவர் தமது சீஷர்களுக்குத் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த பல காரியங்களைப் போதித்தார்.

இயேசுவின் போதனைகளுக்குச் செவிகொடுத்த மக்கள் அவர் அதிகாரத்தோடு பேசுவதைக் கண்டு வியப்படைந்தார்கள். தங்கள் ஜெப ஆலயத்தில் எவருமே இப்படிப் பேசுவதை அவர்கள் கேட்டதில்லை.

இயேசு மலையிலிருந்து இறங்கி வந்தபோது, கூட்டத்தினர் அவர் சென்ற இடமெல்லாம் அவரைப் பின்தொடர்ந்து செல்ல ஆயத்தமாக இருந்தார்கள். அவர்கள் நடுவே ஒரு தொழுநோயாளி இருந்தான். தன்னைச் சுகமாக்க இயேசுவுக்குச் சித்தமா என்று அவன் அவரிடம் கேட்டான். உடனடியாக அந்த மனிதன் குணமாக்கப்பட்டான். ஒரு ரோமப் போர்வீரன் தனது வீட்டில் முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் வேலைக்காரனைக் குணமாக்கும்படி அவரிடம் வேண்டிக்கொண்டான். இயேசு அந்த வேலைக்காரனைக் குணமாக்கினார்.

பேதுருவின் மாமியார் காய்ச்சலினால் அவதிப்பட்டபடியால், இயேசு சீமோன் பேதுருவின் வீட்டுச் சென்றார். அவர் அவளுடைய கையைத் தொட்டவுடன் அவள் சுகமடைந்தாள். பிறகு அவள் எழுந்து வீட்டிலிருந்த எல்லோருக்கும் சேவைசெய்தாள்.

இயேசு மாலை முழுவதும் அங்கே இருந்து நோயாளிகளைக் குணமாக்கினார், பிசாசுகளை விரட்டினார். திரளான மக்கள் அந்த இடத்தை நெருக்கியபோது, அவர் தமது சீஷர்களிடம் தம்மோடுகூடக் கலிலேயாக் கடலின் மறுகரைக்கு வரும்படி கட்டளையிட்டார்.

அவர்கள் படகில் ஏறி கடலின் மறுகரைக்குப் பயணமாகச் சென்றபோது, ஏற்கெனவே இருள் பரவியிருந்தது. திடீரென்று நடுக்கடலில் அவர்கள் சென்றுகொண்டிருந்தபோது, பெரிய புயல் வீசியது, அலைகள் படகைத் தாக்கின. சீஷர்களில் பெரும்பாலானவர்கள் மீன்படிப்பவர்களாக

இருந்தபடியால் அபாயத்தை உணர்ந்து, பயப்பட்டார்கள். ஆனால் உறங்கிக்கொண்டிருந்த இயேசு விழித்தெழவில்லை.

திகிலடைந்த சீஷர்கள் "ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம்" என்று கதறினார்கள். "அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள்?" என்று அவர் அவர்களைக் கடிந்து கொண்டார். பிறகு எழுந்த அவர் காற்றையும், கடலையும் அதட்டினார். அவை அமைதியாகின. "இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே" என்று வியப்போடு தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

## நேர்முகக் கேள்விகள்

1. இயேசு மக்களுக்குப் பிரசங்கித்த செய்தி என்ன?
2. இயேசுவின் முதல் இரண்டு சீஷர்களின் பெயர்கள் என்ன?
3. இந்த இரண்டு சீஷர்களின் தொழில் என்ன?
4. மக்கள் ஏன் இயேசுவைக் காண அதிக ஆவலோடு இருந்தார்கள்?
5. இயேசு மலையில் போதித்த விதத்தைக் கண்டு ஏன் அவரைப் பின்பற்றியவர்கள் வியப்படைந்தார்கள்?
6. இயேசு மலையிலிருந்து இறங்கிய பிறகு தீவிரமான நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவனைக் குணமாக்கினார். அவனுடைய பிரச்சினை என்ன?
7. பிறகு அவர் ஒரு ரோமப் போர்வீரனின் வேலைக்காரனைக் குணமாக்கினார். அவன் எந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்தான்?
8. பேதுருவின் சொந்தத்தில் ஒரு பெண்ணை இயேசு குணமாக்கினார். அவள் எப்படிப் பேதுருவுக்குச் சொந்தமாக இருந்தாள்?
9. இயேசு ஏன் கலிலேயாக் கடலின் அக்கரைக்குச் செல்ல விரும்பினார்?
10. இயேசு படகில் என்ன செய்தார்?
11. இயேசுவின் சீஷர்கள் ஏன் பயப்பட்டார்கள்?
12. இயேசு ஏன் அவர்களைக் கடிந்துகொண்டார்?
13. இயேசு புயலை அடக்கியவுடன் சீஷர்கள் என்ன சொல்லிக்கொண்டார்கள்?

# ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 4

## மத்தேயு 4 - 8

1. இயேசு நம் எல்லோரையும் "மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக" வரும்படி அழைக்கிறார். கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் விடுதலையை நாம் உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலும், பட்டணத்திலும், அண்டைப் பகுதிகளிலும் உள்ள மக்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று இயேசு கட்டளையிட்டிருக்கிறார். அவர் பரலோகத்துக்குத் திரும்பிச் செல்லுவதற்கு முன்பு இதுவே அவர் தம்மைப் பின்பற்றியவர்களுக்குக் கொடுத்த இறுதி வார்த்தைகளாகும். இந்த ஆய்வின் கடைசி வாரத்தில் நாம் இயேசுவின்மீதுள்ள நமது விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளுவது எப்படி என்று தெளிவாகக் கற்றுக்கொள்ளப் போகிறோம். என்றாலும், நம்மில் பலர் பிறரோடு கிறிஸ்துவைப் பகிர்ந்துகொள்ளத் துவங்குவதற்குக் கூடப் பயப்படுகிறார்கள். "நான் இதை எப்படிச் செய்ய முடியும்? எனக்குக் குறைபாடுகள் இருக்கின்றன. எவரையாவது கிறிஸ்துவைப் பின்பற்றும்படி செய்ய என்னால் முடியுமா? அப்படி முடியும் என்றாலும், நான் உலகத்தின் ஒரு சிறிய மூலையில் வாழுகிறேன். நான் உலகத்தின் மற்ற பகுதிகளில் தாக்கம் விளைவிக்க முடியும் என்று இயேசுவால் எப்படி எதிர்பார்க்க முடியும்?" என்றெல்லாம் நாம் நினைக்கிறோம்.

நாம் இதுவரை வாழ்ந்தவர்களிலேயே அதிக அற்புதமாகப் பேசும் திறமையைப் பெற்றிருந்தாலும், கிறிஸ்துவைப் பின்பற்றும்படி எவரையும் உறுதிப்படுத்த முடியாது என்று வேதாகமம் சொல்லுகிறது. நாம் நமது இருதயத்தைக் கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கும்போது, நம்மைத் தொடுவது ஒரு மனிதன் அல்ல. தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னமே மனந்திரும்பும்படி நம்மை உணர்த்தியிருக்கிறது. யோவான் 16:8 வசனம் அவரைக் குறித்து "அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" என்று சொல்லியிருக்கிறது.

நமது வாழ்க்கையை வலையாக வீசி, பரிசுத்த ஆவியானவர் நமது வழியில் கொண்டுவரும் எல்லா மனுஷரையும் சேகரிப்பதே மனுஷரைப் பிடிக்கிறவர்களாக நமது பணியாகும்.

கிறிஸ்துவின்மீதுள்ள நமது விசுவாசத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும் முதல் வழிகளில் ஒன்று கிறிஸ்து நமது வாழ்க்கையில் செய்திருப்பவைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுவதாகும். இதுவே "சாட்சி கூறுதல்" என்று அழைக்கப்படுகிறது. "சாட்சி" என்ற சொல் இன்று நீதிமன்றங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். சாட்சி கூறுபவர்கள் தாங்கள் உண்மை என்று அறிந்தவைகளை, தாங்கள் நேரடியாகக் கண்டவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறார்கள். உங்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்றும், உங்களுடைய சாட்சியை நம்ப முடியாது என்றும் மக்கள் விவாதிக்கலாம். ஆனால் நீங்கள் நேரடியாக அனுபவித்திருக்கும் எதையும் அவர்களால் மறுக்க முடியாது. இப்போது நாம் பாடத்தை நிறுத்தி, ஒரு பயிற்சியை ஒன்றாகச் சேர்ந்து செய்வோம்.

- ஒவ்வொருவரும் தாங்கள் கிறிஸ்துவை அறியுமுன் தங்கள் வாழ்க்கை எப்படியிருந்தது என்பதைக் குறித்துச் சிந்திக்க வேண்டும்.
- பிறகு கிறிஸ்து முதன்முதலாக உங்களுக்கு எப்படி அறிமுகப்படுத்தப்பட்டார் என்பதைக் குறித்துச் சிந்திக்க வேண்டும்.
- பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தை அசைத்து, இயேசுவே தேவன் என்றும், உங்கள் வாழ்க்கைக்கு அவர் தேவை என்றும் உணர்த்திய அந்தக் கணத்தைக் குறித்துச் சிந்தியுங்கள்.
- உங்கள் வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்ற உங்கள் தீர்மானத்தைக் குறித்துச் சிந்தியுங்கள்.

- இறுதியாக, கிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் உண்டாக்கியிருக்கும் மாற்றத்தைக் குறித்துச் சிந்தியுங்கள்.
- இதை உங்கள் மனதில் தொடர்ந்து நினைத்துப் பார்க்க நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். பிறகு வட்டமாக அமர்ந்து ஒவ்வொருவராகத் தங்கள் சாட்சியைக் குழுவோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் மூன்று நிமிடங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது முக்கியமாகும்.

*மேலும், ஒரு குழுவாக ஒருவர் மற்றவருக்கு ஆதரவளிக்கத் துவங்குவதற்கு இதுவே சரியான நேரமாகும். தம்மை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்று தேவன் காட்டும் மக்களுக்காக நாம் நமது தனிப்பட்ட அமைதியான வேளைகளில் ஜெபிக்க வேண்டும்; இவர்கள் நமது பணியிடத்திலோ அல்லது பள்ளியிலோ இருக்கும் மக்களாக இருக்கலாம். அவர்கள் இதுவரை கிறிஸ்துவின் அன்பை ஏற்றுக்கொள்ளாத நெருங்கிய குடும்ப உறுப்பினர்களாக இருக்கலாம். இந்த மக்களுக்காக ஒன்றாகச் சேர்ந்து ஜெபியுங்கள். குழுவிலுள்ள ஒவ்வொருவரும் குறிப்பிடும் பெயர்களை மற்றவர்கள் தங்கள் ஜெபக் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரையும் கிறிஸ்துவிடம் கொண்டுவர இது ஒரு குழுவாகச் செய்யும் முயற்சியாகும்.

*ஆனால் நம்மைவிடத் தூரத்தில் இருக்கும் மக்களுக்காக ஜெபிக்கவும் நாம் மறக்கக்கூடாது. இந்த மக்களுக்காக ஜெபிப்பதும் நமது பொறுப்பாகும்.

*தலைவருக்கான குறிப்பு - மற்றொரு நாட்டிலோ அல்லது நாட்டின் மற்றொரு பகுதியிலோ ஊழியம் செய்துவரும் ஒரு அருட்பணியாளரை நீங்களோ அல்லது உங்கள் போதகரோ அறிந்திருக்கலாம். ஒரு குழுவாக அவருக்காகவும், அவருடைய குடும்பத்துக்காகவும், அவர் ஊழியம் செய்யும் மக்களுக்காகவும் ஜெபிக்கலாம். வேதாகம ஆய்வின் பரிந்துரை ஜெப வேளையில் ஒரு குழுவாக இதைச் செய்யுங்கள். குழுவிலுள்ள யாராவது அந்த அருட்பணியாளரைத் தொடர்புகொண்டு விசேஷித்த தேவைகளையும், ஜெப விண்ணப்பங்களையும் குறித்துக் கேட்கலாம். உலகத்தின் தொலைவான இடங்களில் இருக்கும் மக்களுக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளுவதிலுள்ள வழிகளைக் குறித்து ஒரு குழுவாக ஜெபித்து, வழிகளைத் தேடுங்கள். அடுத்த ஆவிக்குரிய சத்தியத்துக்குச் செல்லுவதற்கு முன்பாக, இப்போதே இதைக் குறித்து விவாதியுங்கள்.

2. இயேசு புயலின்போது தம்மை எழுப்பியதற்காக அல்ல, சீஷர்கள் பயப்பட்டதற்காக அவர்களைக் கடிந்துகொண்டார். சீஷர்கள் புயலின்போது சுற்றிலும் பார்த்தார்கள். புயல்களைப்பற்றி அவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள், இது மோசமான புயலாக இருந்தது. ஆனால் அவர்கள் இன்னும் தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையை அனுபவிக்கவில்லை. தங்கள் வாழ்க்கையில் எந்தப் புயலையும்விடத் தேவன் பெரியவர், அவர் தங்களோடுகூடப் படகில் இருக்கிறார் என்பதை அவர்கள் இன்னும் உணரவில்லை.

**எனக்கு ஒரு ஒன்றரை வயதுப் பெண் குழந்தை இருக்கிறாள். இப்போதுதான் அவள் தன்னுடைய உலகத்தை ஆராய்ந்து பார்க்கத் துவங்கியிருக்கிறாள். அவள் வீட்டில் அங்குமிங்கும் ஓடுகிறாள், டிராயர்களைத் திறந்து பார்க்கிறாள், அவளுடைய சிறு கைகளால் பிடிக்கக்கூடிய பாத்திரங்களை எடுத்துப் பார்க்கிறாள். ஒருநாள் எங்கள் நண்பர் ஒருவருடைய வீட்டில் இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அவள் சாப்பாட்டு அறையின் தரையில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது அந்த வீட்டிலுள்ள பெரிய கறுப்பு நாய் அறைக்குள் நுழைந்தது. உடனே சிறிய கால்களினால் வேகமாக ``அம்மா'' என்று கத்தியபடி ஓடிவந்தாள். நான் அவளைத் தூக்கியவுடன் விறைத்துப்போயிருந்த அவளுடைய தசைகள் உடனடியாகத் தளர்ச்சியடைந்தன. ஏன்? ஏனென்றால் நான் அவளிடத்தில் அன்புகூருகிறேன் என்பதை அவள் அறிவாள், நான் அவளைக் கவனித்துக்கொள்ளுவேன் என்று அவள் நம்பிக்கை வைத்திருந்தாள். ஒருசில நிமிடங்களுக்குள்ளாக அவள் அமைதியாகிவிட்டாள். அந்த நாயைத் தொடும்படி தன் கையை நீட்டினாள்!**

நாம் தேவனுக்கு நமது வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும் அந்தக் கணத்திலிருந்து அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோம். அவர் நமது பாதுகாவலராக இருக்கிறார். அவர் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் பாதுகாப்பாக இருக்கிறார். அவர் நம்மை நேசிக்கிறார், நாம் பயப்படும்போது உடனடியாக அவரிடம் ஓடிச் செல்ல வேண்டும். அவருடைய கரங்களில் அவர் பயத்தை விரட்டித் தள்ளுகிறார். நாம் நமது ஒவ்வொரு நாளும் இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் செட்டைகளின் கீழாக வாழுவோமானால், பயப்பட வேண்டிய அவசியமில்லை.

பழைய ஏற்பாட்டில் தாவீது என்று ஒருவன் இருந்தான். சவுல் ராஜா அவனைக் கொல்ல முயன்றபடியால் அவன் பல கடினங்களையும், பயமுறுத்தக் கூடிய சூழ்நிலைகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. தாவீது தேவனைப்பற்றிய பல சத்தியங்களைக் கற்றுக்கொண்டு, அவரை இன்னும் நெருங்கியபோது, அவர் ``சங்கீதங்கள்" என்று அழைக்கப்படும் பல கவிதைகளை எழுதினார். இந்தச் சங்கீதங்கள் தேவனைப்பற்றிப் போதிக்கும்படி அவரால் தூண்டப்பட்டு எழுதப்பட்டிருக்கின்றன. மொத்தம் 150 சங்கீதங்கள் இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் தாவீது எழுதவில்லை. இவை புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. அவர் பயத்தைக்குறித்துப் பல சங்கீதங்களை எழுதியிருக்கிறார். இந்த வாரம் நாம் வாசித்து தியானிக்கும்படி நான் 27ஆம் சங்கீதத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். இந்த வாரம் உங்கள் ஜெப வேளையில் இந்தச் சங்கீதத்தை வாசியுங்கள். உங்களிடம் பழைய ஏற்பாடு இல்லாதிருக்குமானால் நான் இந்தக் கையேட்டில் கொடுத்திருக்கும் சங்கீதத்தைப் பயன்படுத்துங்கள். உங்கள் எல்லாப் பயங்களையும் அகற்றிவிட்டு, அன்புக்காகவும் பாதுகாப்புக்காகவும் அவருடைய கரங்களில் ஏறிக்கொள்ள உதவுமாறு தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

*இந்த வாரத்தை ஜெபத்தோடு முடியுங்கள். ஆனால் ஜெபப் பங்காளியாக இருக்கும்படி ஒவ்வொரு ஆணும் மற்றொரு ஆணையும், ஒவ்வொரு பெண்ணும் மற்றொரு பெண்ணையும் சேர்த்துக்கொள்ளும்படி சொல்லுங்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அதிகமாகப் பயப்படும் காரியங்களைக் குறித்து ஒருவர் மற்றவரோடு பகிர்ந்துகொள்ளுங்கள். பிறகு ஒவ்வொரு பயத்தையும் ஆண்டவருக்கு முன்பாக ஒப்புக்கொடுத்து, ஒருவர் மற்றவருக்காக ஜெபியுங்கள். பயத்தை எடுத்துப்போட்டு அந்த இடத்தில் விசுவாசத்தை வைக்கும்படி தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள். எல்லாவற்றிலும், நீங்கள் பயப்படும் காரியங்கள் உட்பட எல்லாவற்றிலும் தேவன்மீது நம்பிக்கை வைக்க விரும்புவதை அவரிடம் தெரிவியுங்கள்.

## சங்கீதம் 27

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?

என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள்.

எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.

கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.

தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.

இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும்; அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு, எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு அருளிச் செய்யும்.

என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று.

உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப்போடாதேயும்; நீரே எனக்குச் சகாயர்; என் இரட்சிப்பின் தேவனே, என்னை நெகிழவிடாமலும் என்னைக் கைவிடாமலும் இரும்.

என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்.

கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும்.

என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்; பொய்ச்சாட்சிகளும் ஆக்கிரமித்துச் சீறுகிறவர்களும் எனக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள்.

நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியா திருந்தால் கெட்டுப்போயிருப்பேன்.

கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.

# கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "அன்பு - கிறிஸ்துவின் உலக ஊழியத்தின் அர்த்தம்" - பாடம் 5

## மத்தேயு 8 -10

"அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகினார்" மத்தேயு 9:36.

**பாடத்தைத் துவங்குவதற்கு முன்பாக எத்தனை பேர் கிறிஸ்துவோடுகூடத் தனிமையில் நேரம் செலவழிக்கிறார்கள் என்பதைக் கண்டறியுங்கள். குறைசொல்லாமல், ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையில் தரித்திருக்கும்படி ஒருவர் மற்றவரை அன்போடு ஊக்குவியுங்கள். மத்தேயு சுவிசேஷத்தை முடிக்கும் வரையில் தொடர்ந்து வாசிக்கும்படிக் கூறுங்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் தேவையிலிருக்கும் மக்களுக்காக ஜெபிக்கிறார்களா என்று கேளுங்கள். இந்த வாரத்தில் எவராவது தங்கள் சாட்சியைக் கூறும் வாய்ப்பைப் பெற்றார்களா என்று விசாரியுங்கள்.*

**மறு ஆய்வு**

1. இயேசு இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார். அதற்கு "தேவன் ____________________" என்று அர்த்தமாகும்.
2. தாம் உலகத்துக்குத் திரும்பி வரும்போது, எல்லோரும் தாம் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் ____________________ மேல் வருவதைக் காண்பார்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார்,
3. தாம் எப்போது உலகத்துக்குத் திரும்புவேன் என்பதை ____________________ மட்டுமே அறிந்திருக்கிறார் என்று இயேசு சொல்லியிருக்கிறார்.
4. தங்கள் ____________________ விட்டுவிட்டு மனந்திரும்பிய பலருக்கு யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்தான்.
5. ஒருவர் வந்து பூமியின் மக்களைப் பிரிப்பார் என்று யோவான்ஸ்நானன் கூறினான். அவரைப் புறக்கணிக்கிறவர்கள் அவியாத ____________________ தள்ளப்படுவார்கள்.
6. இயேசு மூன்று முறையும் ____________________ ____________________ வார்த்தையைப் பயன்படுத்தி அவனுக்குப் பதிலளித்தார்.
7. நாம் தேவனை நெருங்கி வாழ வேண்டுமானால், ஒவ்வொரு நாளும் அவரோடுகூட ____________________ நேரம் செலவழிக்க வேண்டும்.
8. நாம் எல்லோரும் "____________________ பிடிக்கிறவர்களாக" ஆக வேண்டுமென்று இயேசு கூறினார்.
9. புயல் வீசியபோது இயேசு படகில் என்ன செய்துகொண்டிருந்தார்?
10. சீஷர்கள் ஏன் பயப்பட்டார்கள்?
11. அவர்கள் தம்மில் விசுவாசம் வைக்காமல் ____________________ இயேசு தமது சீஷர்களைக் கடிந்துகொண்டார்.
12. நாம் கிறிஸ்துவின் பாதுகாப்பின் செட்டைகளின் கீழாக வாழும்போது ____________________ வேண்டிய அவசியமில்லை என்று வேதாகமம் கூறுகிறது.

அச்சுறுத்திய புயலைத் தாண்டி கலிலேயாக் கடலைக் கடந்தபோது, இயேசுவும் அவருடைய சீஷர்களும் மறுகரையைச் சென்றடைந்தார்கள். அங்கே பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்த இரு

மனிதர்களை அவர்கள் சந்தித்தார்கள். இவர்கள் கொடூரமானவர்களாக இருந்தார்கள், கல்லறைகளின் நடுவே வசித்தார்கள். திடீரென்று அவர்களில் ஒருவன் இயேசுவை நோக்கி "இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ" என்று கத்தினார்கள்.

பிசாசினால் பிடிக்கப்பட்ட இந்த மனிதர்கள் இருந்த இடத்துக்குச் சற்றுத் தொலைவில் சிலர் கடற்கரைக்கு அருகே பன்றிகளை மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பிசாசுகள் இயேசு அவர்களை அந்த மனிதர்களைவிட்டு விரட்டுவாரானால், பன்றிக் கூட்டத்துக்குள் போகும்படி அவர்களுக்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கெஞ்சினார்கள். இயேசு "போங்கள்" என்று அனுமதியளித்தார். அவைகள் புறப்பட்டு, பன்றிக்கூட்டத்தில் போயின; அப்பொழுது, பன்றிக்கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, நீரில் மடிந்துபோயின.

பன்றிகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்கள் பட்டணத்துக்குள் ஓடிச் சென்று, அந்த மனிதர்களுக்கும் பன்றிகளுக்கும் நேரிட்டவைகளை விவரித்தார்கள். பட்டணத்தார் வந்து, இயேசு அந்தப் பகுதியைவிட்டுச் செல்லும்படி அவரிடம் வேண்டிக்கொண்டார்கள். இயேசு படகில் ஏறி கலிலேயாவுக்குத் திரும்பினார்.

கலிலேயாவுக்குத் திரும்பியபோது, ஒரு திமிர்வாதக்காரனை அவரிடம் சுமந்துகொண்டு வந்தார்கள். இயேசு அவனைக் குணமாக்கி, அவனுடைய பாவங்களை மன்னித்தார். பார்த்துக் கொண்டிருந்தவர்கள் வியப்படைந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஆனால் பரிசேயர்களோ அவர் தேவதூஷணம் சொல்லுகிறார் என்று குறைகூறினார்கள்.

அங்கிருந்து சென்றபோது இயேசு மத்தேயு என்ற பெயரையுடைய வரிவசூலிப்பவனைச் சந்தித்தார். அவர் தம்மைப் பின்பற்றும்படி மத்தேயுவை அழைத்தார். உடனே அவன் அவரைப் பின்தொடர்ந்தான். இயேசு அந்த மத்தேயுவுடனும், வரிவசூலிக்கும் மற்றவர்களோடும், பட்டணத்தில் மோசமான பெயரெடுத்திருந்தவர்களுடனும் உணவருந்தும்படி சென்றார். இயேசு யாரோடு உணவருந்துகிறார் என்பதைக் கண்ட பரிசேயர்கள் அவருடைய சீஷர்களிடம் இயேசு ஏன் இப்படிச் செய்கிறார் என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம் "பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" என்று பதிலளித்தார்.

இயேசு அங்கிருந்து புறப்பட்டு, வாழ்க்கையின் எல்லாத் தரத்து மக்களையும் சந்தித்தார். மக்கள் நடுவே ஆளுகைசெய்த ஒருவன் இருந்தான். அவனுடைய சிறுமகள் மரித்துப்போயிருந்தாள். இயேசு அந்தப் பெண்ணுக்காகப் புலம்பிக்கொண்டிருந்தவர்களின் மத்தியில் சென்று, அந்தச் சிறுமியின் கையைப் பிடித்து, அவளை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார்.

குணமாக்கும்படி வேண்டிக்கொண்டு தம்மைப் பின்பற்றிவந்த பார்வையற்ற இருவரை அவர் குணமாக்கினார். பிசாசினால் பிடிக்கப்பட்டுப் பேச முடியாமல் இருந்த ஒருவனை அவர் குணமாக்கினார். அவர் அந்தப் பிசாசுகளை விரட்டியபோது அவன் பேசத் துவங்கினான்.

இயேசு மக்களின் அநேகத் தேவைகளைக் கண்டபோது, அவர்கள்மீது மனதுருகினார். தேவை அதிகமாக இருந்தபடியால், அந்த மக்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இருந்தார்கள். அவர் தமது சீஷர்களிடம் திரும்பி "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கூறினார்.

பிறகு அவர் தமது சீஷர்களை இஸ்ரவேல் நாடெங்கும் போகும்படி அனுப்பிவைத்தார். மக்களின் தேவைகளைச் சந்திக்கும் வல்லமையை அவர்களுக்குக் கொடுத்தார். நமது அன்பை அவர்கள் பகிர்ந்துகொண்டு, காட்ட வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். கிறிஸ்துவின் நற்செய்திக்குச் செவிகொடுக்க விருப்பமுள்ளவர்களைத் தேடும்படி அவர் திட்டவட்டமான வழிமுறைகளை அவர்களுக்குக் கொடுத்தார். அப்படிப்பட்ட மக்களைக் காணும்போது, அவர்களுடைய வீட்டுக்குத் தேவ சமாதானம் உண்டாவதாக என்று வாழ்த்தும்படி அவர் கூறினார். ஆனால் பலர் அவர்களையும், அவர்களுடைய வார்த்தைகளையும் புறக்கணிப்பார்கள் என்று அவர் எச்சரித்தார்.

“ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல ஞானமுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்” என்று அவர் அவர்களுக்கு ஆலோசனை கூறினார். சரீரப்பிரகாரமான தேவைகளுக்காகக் கவலைப்பட வேண்டாம் என்று அவர் கூறினார். ஏனென்றால் நமது தலையிலுள்ள முடிகளின் எண்ணிக்கையை அறிந்திருக்கும் பிதாவானவர் எல்லாவற்றையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார், அவர் நம்மை அதிகமாக மதிக்கிறார்.

இறுதியில் “சீஷன் என்பதற்காக இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மட்டும் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று சொல்லி அவர்களை அனுப்பிவைத்தார்.

## நேர்முகக் கேள்விகள்

1. அச்சுறுத்திய படகுப் பயணத்துக்குப் பிறகு இயேசுவும் அவருடைய சீஷர்களும் மறுகரையை அடைந்தபோது, அவர்களைச் சந்தித்தது யார்?
2. அந்த இரண்டு மனிதர்களுக்கும் இருந்த பிரச்சினை என்ன?
3. இயேசு அவர்களுக்காக என்ன செய்தார்?
4. பன்றிகள் ஏன் கடலுக்குள் ஓடிப்போய்ப் பாய்ந்தன?
5. பட்டணத்து மக்கள் ஏன் இயேசுவை அந்தப் பகுதியைவிட்டுப் போகுமாறு கேட்டுக் கொண்டார்கள்?
6. திமிர்வாதக்காரனுக்கு இயேசு என்ன செய்தார்?
7. பரிசேயர்கள் ஏன் இயேசுவைத் தேவதூஷணம் சொல்லுகிறவர் என்று சொன்னார்கள்?
8. இயேசு சந்தித்து, தம்மைப் பின்பற்றி வரும்படி அழைத்த வரிவசூலிப்பவனின் பெயர் என்ன?
9. அந்தக் குறிப்பிட்ட இடத்தில் பரிசேயர்கள் ஏன் இயேசுவையும் அவரோடுகூட உணவருந்தியவர்களையும் குறை கூறினார்கள்?
10. இயேசு இந்த மக்களுக்கு எப்படிப் பதிலளித்தார்?
11. ஆளுகைசெய்தவனின் மகளுக்கு இயேசு என்ன செய்தார்?
12. பார்வையற்றவனுக்கு இயேசு என்ன செய்தார்?
13. பேச முடியாதவனை இயேசு எப்படிக் குணமாக்கினார்? அவனிடமிருந்த பிரச்சினை என்ன?
14. சீஷர்கள் எதைச் செய்யும்படி இயேசு அவர்களை அனுப்பிவைத்தார்?
15. இயேசு தமது சீஷர்கள் ______________ போல ஞானமுள்ளவர்களாகவும், __________________ போல கபடற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்று கூறினார்.
16. எப்படிப்பட்ட காரியங்களுக்காகக் கவலைப்படக் கூடாது என்று அவர் கூறினார்?
17. தேவன் நம்மிடமிருக்கும் _____________________ எண்ணிக்கையைக் கூட அறிந்திருக்கிறார் என்று இயேசு கூறினார்.
18. ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு ஒரு குவளை தண்ணீர் கொடுக்கிறவர்களும்கூடத் தங்கள் பயனைப் பெறுவார்கள் என்று இயேசு கூறினார். யார் இந்தக் குழுவினர்?

# ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 5

## மத்தேயு 8 -10

1. இயேசு ஒவ்வொருவர்மீதும் அக்கறை கொண்டிருக்கிறார். அவர் பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள்மீதும், நோயுற்றவர்கள்மீதும், ஏழை பணக்காரர்மீதும், குறிப்பாகச் சிறுபிள்ளைகள்மீதும் அக்கறைகொண்டிருக்கிறார். தேவனுடைய ராஜ்யத்தில் எல்லோரும் மதிப்புள்ளவர்களாக இருக்கிறார்கள்!

2. மனிதர்கள் எப்போதுமே மற்றவர்கள்மீது அக்கறை காட்டுகிறார்கள் என்று சொல்ல முடியாது. பிசாசினால் பிடிக்கப்பட்டவர்களைக் குறித்த காரியத்தில், பட்டணத்து மக்கள் பன்றிகளைக் குறித்தே அதிக அக்கறைகொண்டார்கள். இயேசுவை அந்தப் பகுதியைவிட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொண்டார்கள். இயேசு அந்த மனிதர்களுக்கு உதவியதைப்பற்றி அவர்கள் நினைக்கவில்லை. தங்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பைக் குறித்தே அவர்கள் நினைத்தார்கள். மக்களுக்கு மேலாகப் பணத்தை மதிப்பது எளிதான காரியம்தான். துரதிருஷ்டவசமாக, நம்மில் பெரும்பாலானோர் இந்தக் கண்ணியில் சிக்கிக்கொள்ளுகிறோம். "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" என்று 1 தீமோத்தேயு 6:10 வசனம் சொல்லுகிறது. மத்தேயு 6:19-21 வசனங்களில் இயேசு சொன்ன வார்த்தைகளை நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்: "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." பணம் சக்திவாய்ந்ததாகும். அது நம்மைக் கட்டுப்படுத்தும், இல்லாவிட்டால் நாம் அதை ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்து, அவர் நம்மைக் கட்டுப்படுத்த இடம்கொடுக்க வேண்டும்.

    - சிந்தியுங்கள் - நான் ஒவ்வொரு வாரமும் என் பணத்தை எப்படிச் செலவழிக்கிறேன்? இதை எழுதிவைப்பது நலமாக இருக்கும்.
    - நான் எப்படி என் பணத்தைச் செலவழிக்கிறேன் என்பதில் இயேசுவை மகிமைப் படுத்துகிறேனா? என்ற கேள்வியைக் கேட்டுக்கொள்ளுங்கள்.
    - நான் தேவனுக்கு அவமதிப்பைக் கொண்டுவரும் காரியங்களை வாங்குகிறேனா அல்லது செய்கிறேனா? நான் என் பணத்தை எப்படிச் செலவழிக்கிறேன் என்பதைக் கொண்டு மற்றவர்களுக்குப் பாதிப்பை உண்டுபண்ணுகிறேனா? நான் என் பணத்தைக் கொண்டு மற்றவர்களுக்கு உதவிசெய்கிறேனா?

பழைய ஏற்பாட்டில், எல்லோரும் தங்களுடைய வருமானத்தில் பத்து சதவீதத்தைத் தம்மிடம் கொடுக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்த்தார். புதிய ஏற்பாட்டில், நாம் நமது வாழ்வையும், நமக்குரிய எல்லாவற்றையும் தேவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் பாரம்பரியமாகப் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தைப் பின்பற்றி, நமது வருமானத்தில் பத்து சதவீதத்தைத் தேவனுடைய ஊழியத்துக்கு அல்லது சபைக்குக் கொடுக்கிறோம். இதுவே தசமபாகம் என்று அழைக்கப்படுகிறது. உங்கள் பணத்தில் எவ்வளவு சதவீதத்தை ஆண்டவர் தமது ஊழியத்துக்குக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார் என்று அறியும்படி ஜெபியுங்கள். இயேசு நமது எல்லாத் தேவைகளையும் சந்திப்பார் என்று வேதாகமம் போதிக்கிறது. "ஆனால் நான் எவ்வளவு ஏழை என்பதைத் தேவன் புரிந்துகொள்ளவில்லையோ?" என்று நீங்கள் நினைக்கலாம். "எனக்கு எவ்வளவு பெரிய கடன் இருக்கிறது என்று தேவன் புரிந்துகொள்ளவில்லை" என்று நினைக்கலாம். இயேசுவும்கூட ஒரு ஏழைக் குடும்பத்தில்தான்

பிறந்தார். ஏழ்மையின் பிரச்சினைகளை இயேசு புரிந்துகொண்டிருக்கிறார். ஆனால் நாம் என்ன செய்ய வேண்டுமென்று அவர் சொல்லுகிறாரோ அதற்குக் கீழ்ப்படிவதில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். தமது ஊழியத்துக்கு நீங்கள் எப்படிப் பொருளாதார ஆதாரத்தை அளிக்க வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார் என்று அவரிடம் கேளுங்கள்.

3. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராக ஆக வேண்டுமானால், அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி, அவர் மற்றவர்களிடத்தில் அன்புகாட்டுவதுபோல நாமும் அன்புகாட்ட வேண்டும். இயேசு மக்களைக் குணமாக்கியதுபோல நம்மால் குணமாக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் இயேசு இப்போதும் மக்களைக் குணமாக்குகிறார். நாம் நோயுற்றவர்களுக்காக ஜெபிப்பதில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் அவர்கள் பக்கத்தில் இருந்து, அவர்கள் வேதனைப்படும்போது அவர்கள் கைகளைப் பிடித்து, ஆறுதல் சொல்ல வேண்டும். இயேசு அவர்களிடத்தில் அன்புகூருகிறார் என்பதை அவர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். பிசாசினால் பிடிக்கப்பட்டவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். இயேசு இப்போதும் தமது மக்களின் ஜெபங்களின் மூலமாக உலகெங்கிலும் பிசாசுக்களை விரட்டிவருகிறார். நாம் தேவையிலிருப்பவர்களுக்காக ஜெபித்து அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். அவர்களுடைய சரீரப்பிரகாரமான தேவைகளைச் சந்திக்கும்படி நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும். ஆனால் உள்ளுக்குள் அவர்களுடைய வாழ்க்கையை மாற்றக்கூடிய கிறிஸ்துவின் அன்பைக் குறித்து அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். குறிப்பாக நாம் சிறுபிள்ளைகளுக்கு உதவ வேண்டும். இந்த எல்லாக் காரியங்களையும் செய்யும்படி இயேசு தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஆனால் சிறுபிள்ளைகளுக்கு உதவுகிறவர்களுக்குச் சிறப்பான பயனை அளிப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

4. சிலரிடத்தில் அன்புகாட்டுவது எளிதான காரியம் இல்லையென்றாலும், நாம் இரக்கம் காட்ட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அந்த நாட்களில் எல்லோரும் வரிவசூலிப்பவர்களை வெறுத்தார்கள். அவர்கள் ஊழல் நிறைந்த ஒரு அரசாங்கத்துக்காக மக்களிடமிருந்து பணத்தை வசூலித்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் அதிகப் பணத்தை வசூலித்து, எஞ்சியதைத் தங்களுக்காக எடுத்துக்கொண்டார்கள். உங்களிடமிருந்து கொள்ளையடித்த ஒருவரிடம் அன்புகாட்டுவது எளிதான காரியமில்லை. குறிப்பாக அவர் தான் செய்ததைக் குறித்து மனந்திரும்பவில்லை என்றால் இது இன்னும் கடினமாக இருக்கிறது. கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் இந்த மக்கள் முற்றிலும் தவறாக நடந்தாலும், அவர்களைக் குற்றந்தீர்க்கும் உரிமை நமக்குக் கிடையாது என்று இயேசு சொல்லியிருக்கிறார். அவர்களுக்காக ஜெபித்து, அவர்களிடத்தில் அன்புகாட்டி, தேவனுடைய மன்னிப்பின் சத்தியத்தை அவர்களிடத்தில் காட்டுவதே நமது கடமையாகும். அவர்கள் தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்பினால் அவர்களும்கூட தேவனுடைய முழுமையான மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுவார்கள். நாம் எல்லோருமே தண்டிக்கப்பட வேண்டிய பாவிகள் என்று வேதாகமம் சொல்லுகிறது. நாம் இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்றிருக்கிறபடியால், நாமும் மன்னிப்பையும், இரக்கத்தையும் காட்ட வேண்டுமென்று வேதாகமம் சொல்லுகிறது. நமது வாழ்க்கையில் தேவனுடைய வல்லமை இல்லாவிட்டால் இது செய்வதற்குக் கடினமான காரியமாக இருக்கிறது.

5. உலகத்தின் தேவைகள் மிக அதிகமாக இருக்கின்றன; நம்மால் தனித்து இதைச் சந்திக்க முடியாது. இதுவரை கிறிஸ்துவின் அன்பை அனுபவிக்காத மக்கள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். மற்றவர்களிடமிருந்து அன்பைப் பெறாதவர்களும் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். மற்றவர்கள் அவர்களுக்குக் காட்டுவார்களானால், தங்கள் வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய அன்பை அனுபவிக்கக்கூடியவர்கள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். நம்மால் முடிந்ததை நாம் செய்ய வேண்டும். இன்னுமதிகமான மக்களைத் தேவனுடைய அன்பை அறியும்படி கொண்டுவருவதற்கு அதிகமான ஊழியர்களைக் கொண்டுவர வேண்டுமென்று நாம் தேவனிடம் வேண்டிக்கொள்ள வேண்டும்.

6. உங்களுடைய உள்ளூர் சபையின்மூலமாக நீங்கள் தேவனுடைய ஊழியத்துக்காகத் தசமபாகம் கொடுத்து தேவன்மீதும் மற்றவர்கள்மீதும் நீங்கள் கொண்டிருக்கும் அன்பைக் காட்ட வேண்டும். தேவன் மக்களுடைய ஆவிக்குரிய, உணர்வுபூர்வமான மற்றும் சரீரப்பிரகாரமான தேவைகளுக்கு ஊழியம் செய்யும்படி உள்ளூர் சபையைப் பயன்படுத்துகிறார். சபை அதன் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவன் உங்கள் தசமபாகத்தைப் பயன்படுத்துகிறார்.

விவாதிப்பதற்கான கேள்விகள்

1. எனது சூழ்நிலைகளிலும், எனது உலகத்திலும் தேவனுடைய அன்பை மற்றவர்களுக்குக் காட்டுவதற்கான வழிகள் யாவை?
2. என்னைச் சுற்றியுள்ள மக்களுக்கு மிகப் பெரிய தேவைகள் யாவை? நான் வாழும் இடத்தில் அதிகமாக வேதனைப்படும் மக்கள் யார்?
3. என்னைச் சுற்றிலுமுள்ள வேதனைப்படும் மக்களுக்கு நான் எப்படி உதவிசெய்ய முடியும்?
4. நான் குறிப்பாகச் சிறுபிள்ளைகளுக்குத் தேவனுடைய அன்பை எப்படிக் காட்ட முடியும்?
5. என்னுடைய வாழ்க்கையில் எந்தெந்த முறைகளில் பணத்துக்கு மேலாக மக்களுக்கு இடம் கொடுக்க முடியும்?
6. எனது பணத்தைக் கொண்டு நான் தேவனை மகிமைப்படுத்துகிறேனா?
7. என்னைச் சுற்றியுள்ள மக்களுக்கு என்னால் எப்படி தேவனுடைய இரக்கத்தைக் காட்ட முடியும்?

*இது உலகத்தின் மற்றொரு பகுதியில் ஊழியம் செய்யும் ஒரு அருட்பணியாளர்களுக்கு ஆதரவளிப்பது குறித்து விவாதிப்பதற்கான சரியான வேளையாகும். இதுவரை தேவனுடைய அன்பைக் குறித்துக் கேள்விப்படாத மற்றொரு நாட்டின் மக்கள் குழுவினருக்காக இப்போது ஜெபிக்கலாம்.*

# கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "காட்டிக்கொடுக்கப்படுதலும் மன்னிப்பும்" - பாடம் 6

## மத்தேயு 11 - 27:10

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" 1 யோவான் 1:9.

**மறு ஆய்வு**

1. இயேசு இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார். அதற்கு "தேவன் ____________________" என்று அர்த்தமாகும்.
2. தாம் எப்போது உலகத்துக்குத் திரும்புவேன் என்பதை ____________________ மட்டுமே அறிந்திருக்கிறார் என்று இயேசு சொல்லியிருக்கிறார்,
3. தங்கள் ____________________ விட்டுவிட்டு மனந்திரும்பிய பலருக்கு யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்தான்.
4. இயேசு மூன்று முறையும் ____________________ ____________________ வார்த்தையைப் பயன்படுத்தி சாத்தானுக்குப் பதிலளித்தார்.
5. நாம் தேவனை நெருங்கி வாழ வேண்டுமானால், ஒவ்வொரு நாளும் அவரோடுகூட ____________________ நேரம் செலவழிக்க வேண்டும்.
6. நாம் எல்லோரும் "____________________ பிடிக்கிறவர்களாக" ஆக வேண்டுமென்று இயேசு கூறினார்.
7. இயேசு எல்லா மக்களுடைய நோய்களைக் ____________________ மூலம் தமது அன்பைக் காட்டினார்.
8. மக்களின் பல ____________________ இயேசு அவர்களுக்காக மனதுருகினார்.
9. இயேசு நமது சீஷர்கள் எல்லோரிடமும் போக வேண்டும் என்றும் ஆனால் ________________ போல ஞானமுள்ளவர்களாகவும், ____________________ போல கபடற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்று கூறினார்.
10. தேவன் நம்மிடமிருக்கும் ____________________ எண்ணிக்கையைக் கூட அறிந்திருக்கிறார் என்று இயேசு கூறினார்.
11. சிறுபிள்ளைகளுக்கு ஒரு கோப்பை தண்ணீர் கொடுப்பவனும்கூடத் தனது ____________________ இழந்துபோக மாட்டான் என்று இயேசு கூறினார்.
12. புயலின்போது இயேசு தமது சீஷர்களிடம் ____________________ என்று கூறினார்.

இயேசு கலிலேயா பகுதியில் போதித்தார், பிரசங்கம்செய்தார், பலரையும் குணமாக்கினார், என்றாலும் பலர் அவருடைய வார்த்தைகளைப் புறக்கணித்தார்கள். இதுவும்கூடத் தேவனுடைய திட்டம் என்று இயேசு தமது சீஷர்களுக்கு விளக்கினார். தேவன் தமது சத்தியங்களை ஞானிகளிடமிருந்து மறைத்து, பிள்ளைகளுக்கு அதை வெளிப்படுத்துவதைத் தெரிந்துகொண்டார் என்று இயேசு கூறினார்.

அவர் தமது சீஷர்களுக்கு முன்னெச்சரிக்கை செய்திருந்த வேளை வந்தது. அவர் எருசலேமுக்குச் சென்று, பிரதான ஆசாரியர்கள் மற்றும் பிற சமயத் தலைவர்களின் கையில் அதிகமாகப் பாடுபட்டு, கொல்லப்பட்டு, மறுபடியும் உயிரோடு எழுவதற்கான வேளை வந்துவிட்டது.

அவர் எருசலேமுக்குள் நுழைந்தது மகிமையானதொரு நிகழ்வாக இருந்தது. மக்கள் தங்கள் ஆடைகளையும், மரக் கிளைகளையும் பாதையில் போட்டு அவர் ஒரு கம்பளத்தின்மீது செல்லுவது போலச் செய்தார்கள். அவர் ஒரு கழுதைமறியின்மீது ஏறிச் சென்றபோது, அவர்கள் ``தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா" என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.

இயேசு ஆலயத்தில் போதித்து, பிரசங்கம்செய்து, நோயாளிகளைக் குணமாக்குவதற்காகப் பல நாட்களைச் செலவழித்தார். ஆனால் பரிசேயர்களோடும் சதுசேயர்களோடும் அவர் அடிக்கடி மோத வேண்டியிருந்தது.

இயேசுவின் சொந்தச் சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து பிரதான ஆசாரியர்களிடம் சென்று, தான் பணத்துக்காக இயேசுவைக் காட்டிக்கொடுப்பதாகக் கூறினான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுப்பதாகக் கூறினார்கள். அவன் அதை வாங்கிக்கொண்டான்.

யூதர்களின் மிக முக்கியமான ஆண்டுப் பண்டிகையாகிய பஸ்கா பண்டிகையின் இரவின்போது இயேசு தமது சீஷர்களோடு இறுதி உணவை அருந்தும்படி உட்கார்ந்தார். இந்த உணவு வேளையில் அவர்கள் சாப்பிட்ட அப்பத்தை இயேசு எடுத்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து ``நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று கூறினார். பிறகு அவர் திராட்சரசம் வைத்திருந்த பாத்திரத்தை எடுத்து, அதை ஸ்தோத்திரம் பண்ணி, ``நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று சொல்லி அவர்களைக் குடிக்கும்படிச் செய்தார்.

உணவருந்திய பிறகு சீஷர்கள் இயேசுவோடுகூட ஒலிவ மலைக்குச் சென்றார்கள். இங்கே அவர்கள் எல்லோரும் இடறலடைவார்கள் என்று இயேசு அவர்களை எச்சரித்தார். ஆனால் பேதுரு தான் ஒருபோதும் ஆண்டவரை மறுதலிக்கப்போவதில்லை என்று கண்டிப்பாகக் கூறினான். காலையில் சேவல் கூவுவதற்கு முன்பாக அவன் தன்னை மூன்று முறை மறுதலிப்பான் என்று இயேசு முன்னறிவித்தார்.

அங்கிருந்து இயேசு தமது சீஷர்களை கெத்செமனே தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார். இரவு முழுவதும் அவர் ஜெபத்தில் கழித்தார். நடப்பது எல்லாவற்றையும் குறித்து அவர் மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருந்தார். தம்மோடுகூட ஜெபிக்கும்படி அவர் சீஷர்கள் எல்லோரிடமும் கேட்டுக்கொண்டார், ஆனால் அவர்கள் உறங்கிவிட்டார்கள். இயேசுவைப் பிடிக்கும்படி யூதாஸ் ஆசாரியர்களோடும் மக்களோடும் வந்தபோதுதான் அவர்கள் விழித்தார்கள்.

யூதாஸ் இயேசுவுக்கு அருகில் வந்து அவரைக் காட்டிக்கொடுக்கும்விதமாக அவர் கன்னத்தில் முத்தமிட்டான். பிரதான ஆசாரியர்கள் இயேசுவைப் பிடித்து, அந்த வேளையில் பிரதான ஆசாரியனாக இருந்த காய்பாவின் வீட்டுக்கு அவரை இழுத்துச் சென்றார்கள். சீஷர்கள் எல்லோரும் கெத்செமனே தோட்டத்தைவிட்டு ஓடிப்போனார்கள்.

இயேசு வீட்டுக்குள் காய்பா மற்றும் பிற தலைவர்களால் விசாரிக்கப்பட்டபோது, பேதுரு வெளியே முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அப்போது ஒரு வேலைக்காரப் பெண் அவனிடம் வந்து ``நீ அந்தக் கலிலேயனோடு இருந்தவன்தானே?" என்று கேட்டாள். அவனோ இல்லை என்று மறுத்தான். பிறகு அவன் வாசலுக்குச் சென்று அங்கே காத்திருந்தான். அப்போது மற்றொரு பெண் அவனைப் பார்த்து அவன் இயேசுவோடு இருந்தவன் என்று குற்றம்சாட்டினாள். இந்த முறை பேதுரு ஆணையிட்டு, அதை மறுத்தான். சிறிது நேரம் கழித்து மற்ற மக்கள் அவனருகே வந்து அவன் இயேசுவோடு இருந்தான் என்று குற்றம்சாட்டினார்கள். இந்த முறை அவன் அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று. அப்போது ஒலிவமலையில் இயேசு சொன்ன வார்த்தைகளைப் பேதுரு நினைவுகூர்ந்தான். அவன் வெளியே சென்று மனங்கசந்து அழுதான்.

காலை வந்தபோது, இயேசுவுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும் என்பதற்காகப் பிரதான ஆசாரியர்கள் அவரைப் பிலாத்துவிடம் அழைத்துச் சென்றார்கள். இயேசுவுக்கு மரண தண்டனை விதிக்கப்படப்போவதை அறிந்த யூதாஸ் மனவருத்தப்பட்டு, அந்த முப்பது காசைத் திரும்பக் கொடுக்கும்படி பிரதான ஆசாரியர்களிடம் கொண்டுசென்றான். ``குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்" என்றான். அதற்கு அவர்கள் ``எங்களுக்கென்ன, அது உன்பாடு" என்று சொல்லிவிட்டார்கள். ஆலயத்தரையில் அந்தக் காசுகளை வீசியெறிந்த யூதாஸ் வெளியே போய், தூக்குப்போட்டுக்கொண்டு மடிந்தான்.

## நேர்முகக் கேள்விகள்

1. ஞானிகளுக்குச் சத்தியத்தை மறைத்து யாருக்கு அதை வெளிப்படுத்துவது தேவனுடைய திட்டமாக இருந்தது?
2. இயேசு எருசலேம் பட்டணத்துக்குள் நுழைந்தபோது, எப்படி நடத்தப்பட்டார்?
3. யூதாஸ் ஏன் பிரதான ஆசாரியர்களிடம் சென்றான்? அவர்கள் ஏன் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுத்தார்கள்?
4. இயேசு தமது சீஷர்களோடு ஆசரித்த கடைசிப் பஸ்கா விருந்தின்போது, திராட்சரசமும், அப்பமும் விசேஷித்தவை என்று அவர்களிடம் கூறினார். எப்படி?
5. இயேசு அவர்களிடம் தமது இரத்தம் சிந்தப்பட வேண்டியிருக்கிறது என்று கூறினார். ஏன்?
6. ஒலிவமலையில் இயேசு தம்மைப் பின்பற்றியவர்களிடம் அவர்கள் இடறிவிழுவார்கள் என்று கூறினார். பேதுரு அதை மறுத்தான். அதன் பிறகு இயேசு பேதுருவைக் குறித்த ஒரு காரியத்தை முன்னறிவித்தார். அது என்ன?
7. யூதாஸ் எப்படி இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்?
8. சமயத்தலைவர்கள் இயேசுவை விசாரித்தபோது, பேதுரு எங்கே இருந்தான்?
9. வெவ்வேறான வேளைகளில் இரண்டு பெண்கள் பேதுருவிடம் வந்து அவனைக் குற்றம் சாட்டினார்கள். அது என்ன?
10. மூன்றாவது முறை பலர் பேதுருவிடம் வந்து அவன் இயேசுவோடு இருந்தான் என்று கூறினார்கள். பேதுரு அவர்களுக்கு எப்படிப் பதிலளித்தான்?
11. யூதாஸ் எப்போது இயேசுவைக் காட்டிக்கொடுத்ததற்காக வருத்தமடைந்தான்?
12. அவன் ஏன் பிரதான ஆசாரியர்களிடம் திரும்பிச் சென்றான்?
13. காட்டிக்கொடுத்ததற்காகக் கிடைத்த பணத்தைப் பிரதான ஆசாரியர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தபோது யூதாஸ் என்ன செய்தான்?

# ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 6

## மத்தேயு 11 - 27:10

**1.** இயேசு தமது சீஷர்களோடு கடைசி உணவை அருந்தியபோது, அந்த நாளிலிருந்து இன்று வரையில் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களால் ஆசரிக்கப்படும் ஒரு பாரம்பரியத்தைத் துவக்கி வைத்தார். இதை நாம் கர்த்தருடைய இராப்போஜனம் என்று அழைக்கிறோம். கர்த்தருடைய இராப்போஜனம் பாவங்களை எடுத்துப்போடும் ஒரு இயல்புக்கு அப்பாற்பட்ட நிகழ்வு அல்ல, அது நமது சரீரத்துக்குச் சிறப்பான ஒன்றைச் செய்யும் காரியமும் அல்ல. அது சாதாரணமான அப்பமும் இரசமும் இயேசுவின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாறும் ஒரு மந்திரவித்தையும் அல்ல. இது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் ஒன்றாகக் கூடிவந்து, சிலுவையில் கிறிஸ்துவின் பலியை நினைவுகூரும்படியாக அப்பத்தைப் புசித்து, இரசத்தை அருந்தும் வேளையாகும். இது நமது பாவத்துக்காக இயேசு செலுத்திய கிரயத்தை நினைவுகூரும் வேளையாகும். அவர் நமக்குக் கொண்டுவந்திருக்கும் மன்னிப்பில் நாம் ஒன்றாகக் களிகூரும் சந்தோஷமும் நன்றியறிதலுமான வேளையாகும். 2 கொரிந்தியர் 11:23-33 வசனங்கள் இது தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு வேளை என்று போதிக்கின்றன. இதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இது நமக்காக அவருடைய பலியைத் தியானித்து, சிலுவையில் அவர் நமக்காகச் செய்திருப்பதின் அடிப்படையில் நமது சொந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும் வேளையாகும்.

2. நாம் அறிவதற்கு முன்பாகத் தேவன் நமது தோல்விகளை அறிவார், என்றாலும் அவர் நம்மை ஏற்றுக்கொண்டு தமது ராஜ்யத்தில் நம்மைப் பயன்படுத்த விரும்புகிறார். இயேசு பேதுருவை "மனுஷனைப் பிடிக்கிறவனாக" அழைத்த நேரத்திலிருந்து, இந்த முக்கியமான இரவு வேளையில் அவன் தன்னை மறுதலிப்பான் என்று அறிந்திருந்தார். ஆனால் நாம் தொடர்ந்து நமது வேதாகமத்தை வாசிக்கும்போது, நடபடிகளின் புத்தகத்தில் தேவன் ஆயிரக்கணக்கான மக்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்த பேதுருவைப் பயன்படுத்துவதைக் காணலாம். வேதாகமத்தில் இரண்டு புத்தகங்கள் பேதுருவால் எழுதப்பட்டிருக்கின்றன. நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் நாம் பார்க்கும்போது, பேதுரு இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில் யாருக்காகப் பயப்பட்டாரோ அவர்களுக்கு முன்பாக எருசலேமில் ஒரு வல்லமையான பிரசங்கத்தைச் செய்வதை நாம் காண்கிறோம்.

இதைப் போலவே நமது தோல்விகளைக் கண்டு தேவன் வியப்படைவதில்லை. கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொண்ட பிறகும்கூட நமது வாழ்க்கையில் தோல்விகள் வருவதுண்டு. நாம் பாவம் செய்வோம்; நாம் அவரைக் காட்டிக்கொடுப்போம்; நாம் வெறுக்கும் அதே காரியங்களையே செய்வோம்.

3. தேவனுக்கு முன்பாகத் தோற்றுப்போன பிறகு நாம் என்ன செய்ய வேண்டும்?

அந்த இரவில் இரண்டு பேர் இயேசுவைக் காட்டிக்கொடுத்தார்கள். ஒருவர் கிறிஸ்துவை மறுதலித்த பேதுரு. பின்னால் தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டார். மற்றவன் யூதாஸ், அவன் தேவனைக் காட்டிக்கொடுத்த பிறகு தற்கொலை செய்துகொண்டான். பேதுருவை விட யூதாஸ் செய்தது மிக மோசமான காரியம் என்பதினாலேயே அவன் தோற்றுப்போனான் என்று பலர் தவறாக நம்புகிறார்கள். அப்படியில்லை. நாம் எல்லோருமே பாவிகள் என்று வேதாகமம் போதிக்கிறது. நாம் எல்லோரும் தேவனைக் காட்டிக்கொடுக்கிறோம். நமது காட்டிக்கொடுத்தலுக்காக நித்திய தண்டனைக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம். அப்படியானால் யூதாஸ் செய்த தவறு என்ன? அவன் தனது பாவத்தைக் குறித்து மனந்திரும்பி, தேவனுடைய மன்னிப்பை நாடவில்லை.

பலர் தாங்கள் எப்போது தவறு செய்கிறோம் என்பதை அறிந்திருக்கிறார்கள். தங்கள் வாழ்க்கையில் செய்த தவறான காரியங்களைக் குறித்துப் பலர் குற்ற உணர்வைப் பெறுகிறார்கள். சிலர் மிகவும் பயங்கரமான காரியங்களைச் செய்திருக்கிறபடியால் தேவனால்கூடத் தங்களை மன்னிக்க

முடியாது என்று நினைக்கிறார்கள். இது உண்மையல்ல என்று வேதாகமம் போதிக்கிறது.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" என்று 1 யோவான் 1:9 வசனம் சொல்லுகிறது.

அதாவது, இதன் அர்த்தம் ஒருவர் ...

- தேவனிடம் வந்து
- தான் செய்திருப்பதைத் தேவனிடத்தில் சொல்லி
- மனந்திரும்பி
- தனது பாவத்தை மன்னிக்கும்படி தேவனிடம் வேண்டிக்கொண்டால்
- தேவன் இந்த மனிதனுக்கு எல்லாவற்றையும் மன்னிக்க உண்மையுள்ளவராக இருக்கிறார் - அது எவ்வளவு பயங்கரமான பாவமாக இருந்தாலும், சிலுவையில் இயேசுவின் பலி அதைச் சுத்திகரிப்பதற்குப் போதுமான தகுதியுள்ளதாக இருக்கிறது.

கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம், ஏற்கெனவே தேவனால் மன்னிக்கப்பட்ட கடந்த காலப் பாவங்களை நினைத்து தோற்கடிக்கப்பட்டவர்களாக வாழக் கூடாது என்பதும் இதன் அர்த்தமாகும். கிறிஸ்து ஏற்கெனவே மன்னித்த காரியங்களுக்கான குற்ற உணர்வோடு நாம் வாழ வேண்டிய அவசியமில்லை. பேதுரு தனது பாவங்களைக் குறித்து மனந்திரும்பியபடியால் அவர் தேவனால் பயன்படுத்தப்பட்டார். நாம் நமது பாவங்களைக் குறித்து மனந்திரும்புவோமானால் தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட முடியும்.

மெய்யாகவே யூதாஸின் இருதயத்தில் தீமையான எண்ணங்கள் இருந்தன. ஒரு நெருங்கிய நண்பரைக் காட்டிக்கொடுத்து, அவர் எந்தத் தீமையும் செய்யாத வேளையில் கொடுமையான மரணத்தை எதிர்நோக்கும்படி செய்தது பயங்கரமான காரியமாகும். என்றாலும் தேவன் யூதாசின் வாழ்க்கைக்கும் ஒரு திட்டத்தை வைத்திருந்தார் என்பதே உண்மையாகும். யூதாஸ்கூட தேவனுடைய மன்னிப்புக்குத் தகுதியானவனாகவே இருந்தான். இயேசு சிலுவையில் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தது யூதாசையும் மன்னிக்கக்கூடிய அளவுக்குப் பெரிதாக இருந்தது. அவன் கிறிஸ்துவிடம் வராமல், தனது குற்ற உணர்வு தன் வாழ்க்கையை ஆட்கொள்ள இடம் கொடுத்தான், அவனால் தாங்க முடியாத நிலையை எட்டியபோது அவன் தற்கொலை செய்து கொண்டான்.

4. பாவங்கள் மன்னிக்கப்படும்படி தமது இரத்தம் சிந்தப்பட்டபடியால், தேவனோடுள்ள நமது உடன்படிக்கை உண்டாகியது என்று இயேசு நமது சீஷர்களிடம் கூறினார். நாம் நமது வாழ்க்கையில் தேவனுடைய மன்னிப்பைப் பெறும்படியாக எதுவும் செய்யவில்லை. கிறிஸ்துவை நாம் நமது இருதயத்தில் ஏற்றுக்கொண்ட பிறகு, இந்த மன்னிப்பை இழந்துபோகும்படி நம்மால் எதையும் செய்ய முடியாது. எபேசியர் 1:13, 14 வசனங்கள் "விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" என்று சொல்லுகின்றன. நீங்கள் "நித்தியஜீவனைப்" பெற்றிருக்கிறீர்கள் என்று யோவான் 3:16 வசனம் சொல்லுகிறது. ஒருமுறை கிறிஸ்து உங்களுக்குள் பிரவேசித்துவிட்டால் அவர் உங்களைவிட்டு விலகுவதில்லை. அப்போதிலிருந்து நீங்கள் நித்தியமாக இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். நாம் நமக்காகக் கிறிஸ்து பலியானதை நினைவுகூர்ந்து, பாவம் செய்வதை விட்டுவிட வேண்டும். ஒவ்வொரு நாளும் அவருக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து வாழ முயல வேண்டும். ஆனால் 1 யோவான் 2:1 வசனம் ஒருவன் பாவம் செய்தால் தனக்குள் யார் வாசம்பண்ணுகிறார் என்பதை நினைவுகூர வேண்டும் என்று சொல்லுகிறது. இயேசு நமக்காகத் தமது பிதாவிடம் பரிந்து

பேசுகிறவராக இருக்கிறார் என்பதை நமது வாழ்க்கையில் நினைவில் வைத்திருக்க வேண்டும். அவர் நமது பாவங்களுக்காக, நமக்குப் பதிலாகக் கிரயம் செலுத்தியவராக இருக்கிறார்.

விவாதிப்பதற்கான கேள்விகள்

1. பேதுருவையும் யூதாசையும் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
2. "மன்னிப்பு" என்ற சொல் உங்களுக்கு எப்படி அர்த்தப்படுகிறது?
3. யூதாசோடுகூட ஒன்றுபடும்படியாக நீங்கள் எப்போதாவது அதிகமான குற்ற உணர்வைப் பெற்றிருக்கிறீர்களா?
4. உங்களுக்குள்ளாகவே யோசித்துப் பாருங்கள்: உங்களுடைய வாழ்க்கையில் பயங்கரமான ஒரு காரியத்தைச் செய்து கிறிஸ்துவின் மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுவது உங்களுக்குக் கடினமானதாக இருந்திருக்கிறதா?
5. இந்தச் சூழ்நிலையில் இயேசுவின் வார்த்தைகள் உங்களுக்கு எப்படியிருக்கின்றன? ஒவ்வொருவரும் 1 யோவான் 1:9 வசனத்தை மனப்பாடமாகச் சொல்லும்படி செய்யுங்கள் அல்லது வாசிக்கச் சொல்லுங்கள்.

ஒவ்வொருவரும் தங்கள் தலையைத் தாழ்த்தி, தங்கள் இருதயத்தில் இருப்பவைகளைத் தேவனிடம் பேச வேண்டும். அங்கே பாவம் இருக்குமானால் அதை அறிக்கையிடுங்கள். குற்ற உணர்வை எடுத்துப் போடும்படி தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள். தேவன் தமது இரக்கத்தின் மூலமாக இந்தப் பாவத்திலிருந்து உங்களை விலக்கிக் காக்குமாறு வேண்டிக்கொள்ளுங்கள். சிலுவையில் இயேசுவின் பலி உங்கள் பாவத்தை மன்னிக்கப் போதுமானது என்று வெளிப்படையாக அறிக்கையிடுங்கள். இந்தச் சத்தியத்தை உரிமையாக்கிக்கொள்ளுங்கள்.

*பின்னால் சாத்தான் உங்களுக்குக் குற்ற உணர்வுகளின் சிந்தனைகளைக் கொடுத்து உங்களைத் தாக்க முயலலாம். இந்தச் சிந்தனைகள் தேவனிடமிருந்து வரவில்லை. இந்த எண்ணங்கள் மெய்யான குற்ற உணர்வு அல்ல, பொய்யான குற்ற உணர்வாகும். தேவன் ஏற்கெனவே மன்னித்துள்ள ஒன்றைக் குறித்து நீங்கள் பொய்யான குற்ற உணர்வைப் பெறுவீர்களானால், உடனடியாக அதைத் தடுத்து, இப்படி ஜெபியுங்கள்:

> "இயேசுவே, என்னுடைய பாவத்தை (பாவத்தைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுங்கள்) நீர் மன்னித்ததற்காக உமக்கு நன்றி. ஆண்டவரே, என்னையும் மன்னிக்கக்கூடிய வகையில் உம்முடைய பலி மதிப்புள்ளதாக இருப்பதற்காக உமக்கு நன்றி. நான் உமது இரத்தத்தில் நம்பிக்கை வைக்கிறேன். எனது மனதிலிருந்து இந்தக் குற்ற உணர்வின் எண்ணங்களை அகற்றியருளும்."

தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார், அவர் இதைச் செய்வார். ஒவ்வொரு முறை சாத்தான் உங்களைத் தாக்கும்போதும், நீங்கள் தேவனை நோக்கி ஜெபம்செய்வீர்களானால், விரைவிலேயே அவன் உங்களைத் தாக்குவதை நிறுத்திவிடுவான். இப்படிப்பட்ட குற்ற உணர்வின் சிந்தனைகளிலிருந்து நீங்கள் நிரந்தரமாக விடுதலைபெற முடியும். கிறிஸ்துவுக்குள் நாம் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் முழுமையான வெற்றியைப் பெற்றிருக்கிறோம்!

# கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "கிறிஸ்து சிலுவையிலறையப்படுதல்" - பாடம் 7

## மத்தேயு 26 - 27

"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" 1 கொரிந்தியர் 1:18.

**மறு ஆய்வு**

1. இயேசு இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார். அதற்கு "தேவன் ____________________" என்று அர்த்தமாகும்.
2. தாம் எப்போது உலகத்துக்குத் திரும்புவேன் என்பதை ____________________ மட்டுமே அறிந்திருக்கிறார் என்று இயேசு சொல்லியிருக்கிறார்,
3. தங்கள் ____________________ விட்டுவிட்டு மனந்திரும்பிய பலருக்கு யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்தான்.
4. இயேசு மூன்று முறையும் ____________________ ____________________ வார்த்தையைப் பயன்படுத்தி சாத்தானுக்குப் பதிலளித்தார்.
5. நாம் தேவனை நெருங்கி வாழ வேண்டுமானால், ஒவ்வொரு நாளும் அவரோடுகூட ____________________ நேரம் செலவழிக்க வேண்டும்.
6. தமது சீஷர்கள் "____________________ ____________________" ஆக வேண்டுமென்று இயேசு கூறினார்.
7. தமது பிரசன்னம் அவர்களோடு இருக்கிறபடியால் தம்மைப் பின்பற்றுகிறவர்கள் ____________________ கூடாது என்று இயேசு கூறினார்.
8. இயேசு பூமியில் தனது நாட்களை ஜெப ஆலயங்களில் ____________________ தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து ____________________ மக்களின் நோய்களைக் ____________________ கழித்தார்.
9. இயேசு நமது சீஷர்கள் எல்லோரிடமும் போக வேண்டும் என்றும் ஆனால் ________________ போல ஞானமுள்ளவர்களாகவும், ____________________ போல கபடற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்று கூறினார்.
10. தேவன் நம்மிடமிருக்கும் ____________________ எண்ணிக்கையைக் கூட அறிந்திருக்கிறார் என்று இயேசு கூறினார்.
11. ஒலிவமலையில் இருந்த வேளையில் இயேசு காலையில் சேவல் கூவுவதற்கு முன்பாக ____________________ மூன்று முறை தன்னை மறுதலிப்பான் என்று முன்னறிவித்தார்.
12. முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவைக் காட்டிக்கொடுத்த சீஷன் ____________________ .
13. ____________________ தான் மறுதலித்ததைக் குறித்து மனந்திரும்பினான். பிற்காலத்தின் தேவன் அவனை வல்லமையாகப் பயன்படுத்தினார்.
14. ____________________ தான் செய்ததற்காக அதிகமாக வருத்தப்பட்டான். வெளியே போய் அவன் தற்கொலை செய்துகொண்டான்.
15. நாம் நமது பாவங்களை ____________________ தேவன் நமது பாவங்களை நமக்கு ____________________ ____________________ அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு உண்மையுள்ளவராக இருக்கிறார் என்று வேதாகமம் போதிக்கிறது.

பேதுரு காய்பாவின் வீட்டுக் கதவுக்கு வெளியே நின்றுகொண்டிருந்தபோது, உள்ளே இயேசுவின்மீது எல்லா வகைப்பட்ட பொய்ச்சாட்சிகளின்மூலமும் குற்றம்சாட்டினர். எதுவுமே அவரைக் குற்றப்படுத்த நம்பத்தகுந்ததாக இருக்கவில்லை. இயேசு தமது சார்பாகப் பேசுவதற்காக வாயைத் திறக்காமல், குற்றம் சாட்டுகிறவர்கள் தொடர்ந்து தம்மைத் தாக்க இடம் கொடுத்தார். எதையும் சாதிக்க முடியாமல் போனபோது காய்பா இயேசுவிடம் "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" என்று கேட்டான்.

இயேசு இறுதியாகத் தமது மௌனத்தைக் கலைத்து, "நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று பதிலளித்தார்.

காய்பாவுக்கு இதுவே போதுமான நிரூபணமாக இருந்தது. அவன் தனது ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, இயேசு தேவதூஷணம் கூறினார் என்று அறிவித்தான். அவர்கள் இயேசுவின் முகத்தில் துப்பி, அவரைக் கேலிசெய்து, அவரை அடித்து, கன்னத்தில் அறைந்தார்கள்.

விடிந்தபோது, பிரதான ஆசாரியர்களும் தலைவர்களும் அவரைக் கட்டி, யூதேயா பிராந்தியத்துக்கு ரோம அதிபதியாக இருந்த பொந்தியு பிலாத்துவிடம் அவரை இழுத்துச் சென்றார்கள். அவன் இயேசுவிடம் "நீ யூதருடைய ராஜாவா" என்று கேட்டான். இயேசு "நீர் சொல்லுகிறபடிதான்" என்று பதிலளித்தார். பிரதான ஆசாரியர்கள் பிறகு அவர்மீது அநேக குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். ஆனால் அவர் பதிலேதும் பேசவில்லை. இயேசு அமைதியாக இருப்பதைக் கண்டு அதிபதி வியப்படைந்தான். அவன் இயேசுவைக் குற்றமுள்ளவராகக் காணவில்லை. அவரை விடுவிப்பதற்கு அவன் அமைதியான வழியைத் தேடினான்.

அது யூதர்களின் மிக முக்கியமான பண்டிகையாகிய பஸ்கா பண்டிகையின் நாட்களாக இருந்தபடியால், மக்களின் விருப்பப்படி ஒரு கைதியை விடுதலைசெய்வது பிலாத்துவின் வழக்கமாக இருந்தது. இந்த ஆண்டு அவர் இருவரில் ஒருவரைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பை மக்களுக்குக் கொடுத்தான்: ஒருவன் வெறுக்கப்பட்ட குற்றவாளியாகிய பரபாஸ், மற்றவர் இயேசு. இவர்களில் யாரை விடுதலைபண்ண வேண்டும் என்று அவன் மக்களிடம் கேட்டான். பிரதான ஆசாரியர்களால் தூண்டிவிடப்பட்ட மக்கள் பரபாசை விடுவித்து, இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று கூக்குரலிட்டார்கள். "ஏன் என்ன பொல்லாப்புச் செய்தான்" என்று அவன் இயேசுவைக் குறித்துக் கேட்டான். மக்களோ அவரைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று இன்னுமதிகமாகக் கத்தினார்கள். மக்கள் கட்டுப்பாடில்லாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்ட பிலாத்து அவர்கள் விருப்பத்துக்கு இடம் கொடுத்தான். "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று அவன் கைகழுவினான். மக்களோ "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று கூறினார்கள். பிலாத்து பரபாசை விடுவித்து, இயேசுவை வாரினால் அடிக்கும்படி கூறினான். போர்வீரர்கள் பிலாத்துவின் அரண்மனைக்கு இயேசுவை இழுத்துக்கொண்டு போய் அவரை இன்னும் துன்புறுத்தினார்கள்.

அங்கே அவருடைய ஆடையைக் களைந்து, சிவப்பு வண்ண அங்கியை அவருக்கு உடுத்தினார்கள். அவர் தலையில் ஒரு முள்முடியை வைத்து, அவர் கையில் ஒரு கோலைக் கொடுத்தார்கள். போர்வீரர்கள் அவரைக் கேலிசெய்து, அவர்மீது துப்பினார்கள். அவர் முன்பு முழங்காற்படியிட்டு அவரை வணங்குவதாக இழிவுபடுத்தினார்கள். பிறகு அவர் கையிலிருந்த கோலை வாங்கி அதைக் கொண்டு அவருடைய தலையில் அடித்தார்கள்.

போர்வீரர்கள் பிறகு இயேசுவின் ஆடைகளை அவருக்கு அணிவித்தார்கள். அவரைக் கபாலஸ்தலம் என்று அர்த்தப்படும் கொல்கொதாவுக்கு இழுத்துச் சென்றார்கள். இது சிலுவையில் அறையப்படும் இடமாகும். பிலாத்துவின் அரண்மனையிலிருந்து நடந்துசெல்லும்போது, சீமோன் என்பவனை இயேசுவின் சிலுவையைச் சுமந்துவரும்படி கட்டாயப்படுத்தினார்கள்.

இயேசு சிலுவையில் தொங்கியபோது, போர்வீரர்கள் சீட்டுப்போட்டு, அவருடைய ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டார்கள். சிலுவையின் அடியில் இருந்தபடி அவர் மரிப்பதைப்

பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிரதான ஆசாரியர்களும், மற்ற மூப்பர்களும் வந்து அவரைக் கேலி செய்து, அவர் சிலுவையைவிட்டு இறங்கிவருமாறு இழிவாகப் பேசினார்கள். மேலும் பலர் அந்த இடத்துக்கு வந்து தங்கள் தலைகளை உயர்த்தி அவரைத் தூஷித்தார்கள். அவருக்கு அடுத்தபடியாகச் சிலுவைகளில் தொங்கிக்கொண்டிருந்த கள்ளர்கள்கூட அவருக்கு விரோதமாகப் பேசினார்கள்.

ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மணி நேரம் வரையில் பூமியெங்கும் இருள் பரவியது. இயேசு தேவனை நோக்கி "ஏலி! ஏலி! லாமா சபக்தானி" என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று அர்த்தமாம். இதைக் கேட்டவுடன் பார்த்துக்கொண்டிருந்த ஒருவன் கடற்காளானை எடுத்து, காடியில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். கூட்டத்திலிருந்த மற்றவர்கள் "பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம்" என்று கூறினார்கள். பிறகு இயேசு மறுபடியுமாகச் சத்தமிட்டு, தமது ஆவியை விட்டார்.

அவருடைய மரணத்தின்போது, அவர் யாரென்பதற்குச் சாட்சியாக எருசலேமெங்கும் பல விநோதமான காரியங்கள் நேரிட்டன. ஆலயத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தை மற்ற இடங்களிலிருந்து பிரித்த திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது. பூமியதிர்ச்சி உண்டாகி, கன்மலைகள் பிளந்தன. பல கல்லறைகள் திறந்தன. இயேசுவைப் பின்பற்றியவர்களில் ஏற்கெனவே மரித்தவர்களின் சரீரங்கள் உயிரோடு எழுந்தன. அவர்கள் எருசலேமில் சுற்றித் திரிந்தார்கள்.

இயேசு மரித்த அன்று மாலையில், அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு என்னும் செல்வந்தன் பிலாத்துவிடம் சென்று அடக்கம்பண்ணும்படி இயேசுவின் சரீரத்தைக் கொடுக்கும்படி கேட்டான். பிலாத்து சம்மதித்தான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, தூய மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான். மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டார்கள்.

## நேர்முகக் கேள்விகள்

1. காய்பாவின் வீட்டில் நடந்த விசாரணையில் யூதத் தலைவர்கள் இறுதியாக இயேசுவை எப்படிக் குற்றப்படுத்தினார்கள்?
2. தமக்கு எதிரான எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் இயேசு எப்படிப் பதிலளித்தார்?
3. தம்மை எதிர்த்துக் குற்றம்சாட்டியவர்களுக்கு எதிராக இயேசு அமைதியாக இருந்தது பிலாத்துவில் எத்தகைய தாக்கத்தை விளைவித்தது?
4. பரபாஸ் என்பவன் யார்?
5. ரோமப் போர்வீரர்கள் இயேசுவை எப்படி நடத்தினார்கள்?
6. இயேசு சிலுவையில் தொங்கியபோது ஆசாரியர்களும் மற்றவர்களும் அவரை எப்படி நடத்தினார்கள்?
7. ஆறாம் மணி நேரத்துக்கும் ஒன்பதாம் மணி நேரத்துக்கும் இடையில் பூமியெங்கும் நேரிட்டது என்ன?
8. இயேசு தமது ஆவியைத் தேவனிடம் ஒப்படைப்பதற்கு முன்பாகக் கூறியது என்ன?
9. இயேசுவின் மரணத்தின்போது நடந்த விநோதமான காரியங்கள் யாவை?
10. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை என்ன செய்தான்?

## ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 7

## மத்தேயு 26 - 27

தேவனுடைய வழிகள் மனிதனுடைய வழிகள் அல்ல. 1 கொரிந்தியர் 1:18-21, 27 வசனங்களை நாம் ஒன்றாகச் சேர்ந்து வாசிப்போம். இந்த பகுதியை இரண்டு அல்லது மூன்று முறை வாசியுங்கள். அப்போது எல்லோருக்கும் வேதாகமம் சொல்லியிருப்பதைக் குறித்துச் சிந்திக்க நேரம் கிடைக்கும்.

***"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.***

***அந்தப்படி ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்கு வேன் என்று எழுதியிருக்கிறது.***

***ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா? எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று... ஞானிகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்."***

*கிறிஸ்துவின் வாழ்க்கையை நாம் பார்க்கும்போது, தேவனுடைய வழிகள் மனிதனுடைய வழிகள் அல்ல என்பதைக் காண முடியும்.*

- *உலகத்தில் ஒரு ராஜா பிறக்கும்போது, அவன் அரண்மனையில் பிறக்கிறான். ஆனால் தேவன் ராஜாதிராஜாவாகிய இயேசுவை ஏழ்மையில் பிறக்கும்படி அனுப்பினார்.*
- *ஒரு முக்கியமான செய்தியை அறிவிக்கும்போதோ அல்லது ஒரு முக்கியமான நபரின் வருகையைக் குறித்து அறிவிக்கும்போதோ, இந்தச் செய்தி அறிவிப்பவன் செல்வந்தனாக, அழகான ஆடைகளை அணிந்து, முக்கியமான வாகனத்தில் வருவான். இயேசுவின் வருகையை அறிவிக்க தேவன் ஒட்டகமயிர் ஆடையை அணிந்த யோவான்ஸ்நானனை வனாந்தரத்துக்கு அனுப்பினார். மக்கள் போய் அவனுடைய பேச்சைக் கேட்க வேண்டியிருந்தது.*
- *ஒரு ராஜாவால் தனது எதிரியை எளிதாக மேற்கொள்ள முடியுமானால், போரிட்டு அவனை அழித்துவிடுகிறான். இயேசு சாத்தானால் சோதிக்கப்படும்படி தாமாகவே வனாந்தரத்துக்குச் சென்றார். அவர் அப்போது சாத்தானை அழித்துப்போடவில்லை.*
- *ஒரு மானிட ராஜா தனக்கு நெருக்கமான தோழர்களைத் தெரிந்துகொள்ளும்போது, மிகச் சிறந்த பள்ளிகளில் படித்துப் பட்டம்பெற்ற, மிகச் சிறந்த குடும்பங்களில் பிறந்த, அதிகமாகப் பணவசதி கொண்டிருப்பவர்களைத் தெரிந்துகொள்ளுகிறான். இயேசு மிகவும் சாதாரணமான தொழில்புரிந்த மீன்பிடிப்பவர்களையும், வரிவசூலிப்பவர் களையும் தெரிந்துகொண்டார்.*
- *ஒரு மானிட ராஜா மக்கள் தனக்குக் கீழ்ப்படியும்படி பலவந்தம்பண்ணுகிறான், அவர்கள் கீழ்ப்படியாவிட்டால் தண்டிக்கிறான். அன்புகாட்டும்படி இயேசு நமக்குப் போதித்திருக்கிறார். மக்கள் தம்மைப் பின்பற்றுவதையோ அல்லது புறக்கணிப்பதையோ தெரிந்துகொள்ளுவதை அவர் அனுமதிக்கிறார்.*
- *ஒரு மானிட ராஜா, மக்கள் தனக்காக வேலைசெய்து, தனக்கு வரி கட்டும்படி செய்கிறான், தனது அரசைக் காட்டிக்கொடுப்பவர்களைக் கொன்றுபோடுகிறான். இயேசு நமது பாவங்களுக்கான கிரயத்தைச் செலுத்தும்படி தாமே சிலுவையில் மரித்தார். நாம் அவரோடுகூட நித்தியத்தைக் கழிக்கும்படி விடுவிக்கப்படுவதை அவர் விரும்புகிறார்.*

- ❖ *ஒரு மானிட ராஜா மரிக்கும்போது, அவன் அடக்கம்பண்ணப்பட்டு அவனுடைய மகன் அரியணையில் ஏறுகிறான். இயேசு மரித்தபோது, அவர் உயிரோடு எழுந்து, நித்தியத்துக்குமாக ஆளுகைசெய்கிறார்.*

*இயேசு ஒரு மனிதனல்ல, அவர் தேவனாக இருக்கிறார். அவரை ஆராதித்துப் போற்றி, அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவர் நம்மை நேசித்து, நமக்குச் சிறப்பானதை விரும்புகிறார். பூமியில் அவருடைய வாழ்க்கையை நம்மால் முற்றிலுமாகப் புரிந்துகொள்ள முடியாது. மனிதனுடைய சிறிய சிந்தையினால் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குத் தேவனுடைய வழிகள் பெரியவை. அவை மனிதருக்குத் தர்க்கரீதியாகத் தோன்றுவதில்லை.*

**கர்த்தர் தமது மக்களின் துதிகளைக் கேட்க விரும்புகிறார் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. இயேசுவிடம் நீங்கள் எவ்வளவாக அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள் என்பதைக் கூறி, அவர் நமக்குச் செய்துள்ள அற்புதமான காரியங்களுக்காக அவரைப் போற்றுவதே துதித்தலாகும். நமது இருதயத்தில் நாம் தேவனை நேசிப்பதை அவர் விரும்புகிறார். "ஆண்டவரே, நீர் என்னிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நான் உம்மிடத்தில் அன்புகூருகிறேன்" அல்லது "நீர் மகா வல்லமையான தேவனாக இருக்கிறபடியால் உம்மைத் துதிக்கிறேன்" போன்ற வார்த்தைகளைக் கேட்கத் தேவன் விரும்புகிறார். இவை தனிப்பட்ட முறையில் தேவன் எனக்கு எப்படியிருக்கிறார் என்பதைத் தெரிவிக்கின்றன.*

*கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் மரணத்தைக் குறித்து நாம் சிந்திக்கும்போது, பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்த தேவன் நமக்காக என்ன செய்திருக்கிறார் என்பதை நினைத்து வியப்படைய மட்டுமே முடியும். நம்மீது அவர் காட்டும் அன்பு நாம் புரிந்துகொள்ளக் கூடியதைவிட அதிகமானதாகும். நாம் நினைக்கக் கூடியதைவிட அவருடைய வழிகள் பெரியவையாகவும் மேன்மையானவையாகவும் இருக்கின்றன. இந்தக் கணத்தில் சிறிது நேரம் தரித்திருந்து, தேவனைத் துதிப்பது நலமாகும்.*

*நமது பாவங்களுக்கான பலியாக மரிப்பதே அவர் சிலுவையில் அறையப்பட்டதின் நோக்கமாகும். நீங்கள் செய்த, செய்யப்போகும் பாவங்களுக்காக அவர் தண்டிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட்டு, குற்றந்தீர்க்கப்பட்டார். நமது ஆண்டவராகவும் இரட்சகராகவும் இருப்பதற்காக நாம் நாள்தோறும் அவரை ஸ்தோத்திரித்து, துதிக்க வேண்டும்.*

*இப்போது நாம் "வாக்கிய ஜெபங்கள்" என்றழைக்கப்படும் ஜெபத்தைச் செய்யப் போகிறோம். அதாவது ஒவ்வொருவரும் தனது மனதிலிருந்து தேவனிடத்தில் சொல்ல விரும்பும் ஒரு வாக்கியத்தைச் சொல்ல வேண்டும். இப்போது நாம் எல்லோரும் நமது தலைகளைத் தாழ்த்தி, தேவனைப் பற்றியும், இயேசுவைப் பற்றியும், அவர் பூமியில் செய்த ஊழியத்தையும், சிலுவையில் அவர் செய்ததையும், அவர் வரப்போவதையும், இப்போது அவர் நமது வாழ்க்கையில் நமக்காகச் செய்துகொண்டிருப்பதையும் நினைத்துப் பார்ப்போம். பிறகு வரிசையாக தேவனிடம் நமது உணர்வுகளைத் தெரிவிப்போம். எடுத்துக்காட்டாக, "அன்பான பிதாவே, நீர் என்னை இரட்சித்தபடியால் உம்மிடத்தில் அன்புகூருகிறேன்." பிறகு மற்றொரு நபர் ``பிதாவாகிய தேவனே, நீர் எனக்குத் தயவுள்ள பிதாவாக இருக்கிறீர்" என்று ஜெபிக்க வேண்டும். ஒவ்வொருவரும் ஆவியானவர் தங்களை வழிநடத்துகிறபடி பலமுறை ஜெபிக்க வேண்டும். இது நமது இருதயத்தில் இருப்பவைகளை வெளியரங்கமாகப் பகிர்ந்துகொள்ளும் நேரமாகும். தேவைப்படும் நேரம் வரை தொடர்ந்து செய்யுங்கள். பிறகு ஜெப விண்ணப்பங்களைப் பார்த்து, ஒருவர் மற்றவருக்காக ஜெபியுங்கள்.*

*உறுப்பினர்கள் தாங்கள் தேவனோடு செலவழிக்கும் அமைதியான நேரத்தில் துதிக்கும் வேளைகளையும் சேர்க்கத் துவங்க வேண்டும் என்று தலைவர் அவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டும். அவர்களுடைய ஜெப வேளை எப்படியிருக்கிறது என்று ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு உறுப்பினரிடமும் கேட்க மறவாதீர்கள். பிரச்சினைகளை எதிர்நோக்குகிறவர்களை ஊக்குவியுங்கள். தேவன் தங்களுக்குக் காட்டியவைகளையும், தங்களுக்காகச் செய்தவைகளையும் அவர்கள் ஒருவர் மற்றவரோடு பகிர்ந்துகொள்ளும்படி செய்யுங்கள்.

# கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்" - பாடம் 8
## மத்தேயு 27

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே" எரேமியா 29:11.

**மறு ஆய்வு**

1. இயேசு இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார். அதற்கு "தேவன் ____________________" என்று அர்த்தமாகும்.
2. தாம் எப்போது உலகத்துக்குத் திரும்புவேன் என்பதை ____________________ மட்டுமே அறிந்திருக்கிறார் என்று இயேசு சொல்லியிருக்கிறார்,
3. தங்கள் ____________________ விட்டுவிட்டு மனந்திரும்பிய பலருக்கு யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்தான்.
4. இயேசு மூன்று முறையும் ____________________ ____________________ வார்த்தையைப் பயன்படுத்தி சாத்தானுக்குப் பதிலளித்தார்.
5. நாம் தேவனை நெருங்கி வாழ வேண்டுமானால், ஒவ்வொரு நாளும் அவரோடுகூட ____________________ நேரம் செலவழிக்க வேண்டும்.
6. தமது சீஷர்கள் "____________________ ____________________" ஆக வேண்டுமென்று இயேசு கூறினார்.
7. இயேசு படகில் வந்த சீஷர்களிடம் ____________________ கூடாது என்று கூறினார்.
8. மக்களின் பல ____________________ கண்டவுடன் இயேசு மனதுருக்கம் கொண்டார்.
9. இயேசு தமது சீஷர்கள் தமது நாமத்தில் போக வேண்டும் என்றும் ஆனால் ____________________ போல ஞானமுள்ளவர்களாகவும், ____________________ போல கபடற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்று கூறினார்.
10. காய்பாவின் வீட்டு முற்றத்தில மூன்று முறை இயேசுவை ____________________ மூலம் பேதுரு அவரைக் காட்டிக்கொடுத்தான்.
11. யூதாஸ் ____________________ வெள்ளிக்காசுக்காக இயேசுவை ஆசாரியர்களிடம் ஒப்புக்கொடுத்து, அவரைக் காட்டிக்கொடுத்தான்.
12. நாம் நமது பாவங்களை அறிக்கையிடும்போது இயேசு அவை எல்லாவற்றையும் ____________________ .
13. ரோமப் போர்வீரர்கள் இயேசுவை எப்படி நடத்தினார்கள்?
14. இயேசு சிலுவையில் மரித்துக்கொண்டிருந்த வேளையில் ஆசாரியர்கள் சிலுவையின் அருகே நின்று அவரை ____________________ .
15. இயேசு மரித்த வேளையில் பல விநோதமான காரியங்கள் நடந்தன. மரித்துப்போன பலர் ____________________ எருசலேமைச் சுற்றிவந்தார்கள்.
16. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை வாங்கி அதை ஒரு ____________________ வைத்தான்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டதற்கு அடுத்த நாள் பிரதான ஆசாரியர்களும், பரிசேயர்களும் ஒன்றாகச் சேர்ந்து பிலாத்துவிடம் சென்றார்கள். இயேசு தாம் ஏற்கெனவே மரித்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுவதாகத் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருந்ததை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எவரும் இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போய்விடாதபடி அதைப் பாதுகாக்க அனுமதிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். பிலாத்துவின் அனுமதியைப் பெற்றவுடன் அவர்கள் கல்லறைக்குச் சென்று அதை மூடியிருந்த கல்லில் முத்திரை போட்டார்கள். ஆயுதம் தரித்த காவலர்களையும் காவலுக்கு வைத்தார்கள்.

ஓய்வுநாளுக்கு அடுத்த நாள், வாரத்தின் முதலாம் நாளில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்குச் சென்றார்கள். அவர்கள் அங்கே சென்றபோது, பெரிய பூமியதிர்ச்சி உண்டாகியது. கல்லறையை மூடியிருந்த பெரிய கல் நகர்த்தப்பட்டது. கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி, அந்தக் கல்லின்மீது உட்கார்ந்தான். அவனுடைய ஆடைகள் உறைபனியைப்போல வெண்மையாக இருந்தன. அவன் மின்னலைப்போலப் பிரகாசமாக இருந்தான். கல்லறையைக் காவல் காத்துக் கொண்டிருந்தவர்கள் பயத்தால் விறைத்து செத்தவர்கள்போலக் கிடந்தார்கள்.

பயப்பட வேண்டாம் என்று அந்தத் தூதன் பெண்களிடம் கூறினான். `` சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன்'' என்று கூறினான்.

இதைக் கேட்டவுடன் அந்தப் பெண்கள் சந்தோஷமடைந்தார்கள். சீஷர்களிடம் இதைச் சொல்லும்படி ஓடிச்சென்றார்கள். வழியில் இயேசு அவர்களைச் சந்தித்து ``வாழ்க'' என்று கூறினார். அவர்கள் அருகே வந்து அவருடைய பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.

இதற்கிடையே, கல்லறையைக் காவல் காத்துக்கொண்டிருந்த காவலர்கள் பட்டணத்துக்குள் நுழைந்து, என்ன நடந்தது என்பதைப் பிரதான ஆசாரியர்களிடம் அறிவித்தார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் கூடி ஆலோசித்தார்கள். அவர்கள் காவலர்களிடம் அதிகமான பணத்தைக் கொடுத்து, நாங்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது, மக்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள் என்று சொல்லி அனுப்பிவைத்தார்கள். பிலாத்துவுக்கு இந்தச் செய்தி எட்டினால், அவர்களுக்கு எந்த ஆபத்தும் வராதபடி தாங்கள் பார்த்துக்கொள்ளுவதாகவும் கூறினார்கள். எனவே காவலர்கள் அந்த இலஞ்சத்தை வாங்கிக்கொண்டு, பல புரளிகளைப் பரப்பினார்கள், இவை பட்டணத்தில் பல ஆண்டுகளாகப் பேசப்பட்டன.

எஞ்சியிருந்த பதினொரு சீஷர்களும் கலிலேயாவில் இயேசு தங்களைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்த மலைக்குச் சென்றார்கள். அவரைக் கண்டபோது, அவரைப் பணிந்துகொண்டார்கள், சிலர் சந்தேகப்பட்டார்கள். இயேசு பரத்துக்கேறுவதற்கு முன்பாக அவர்களிடம் கடைசியாகப் பேசியபோது **``வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' என்று கூறினார். ஆமென்.**

## நேர்முகக் கேள்விகள்

1. பரிசேயர்கள் ஏன் இயேசுவின் கல்லறைக்குக் காவல் போட விரும்பினார்கள்?
2. எந்த இரண்டு பெண்கள் கல்லறைக்கு வந்தார்கள்?
3. அவர்கள் அங்கே சென்றபோது பார்த்தது என்ன?
4. தூதன் அவர்களிடம் கூறியது என்ன?

5. காவலர்களுக்கு என்ன நேரிட்டது?
6. தூதன் வந்தபிறகு காவலர்கள் எங்கே சென்றார்கள்?
7. பிரதான ஆசாரியர்கள் அவர்களுக்கு என்ன கொடுப்பதாகக் கூறினார்கள்?
8. பெண்கள் சீஷர்களைப் பார்க்கும்படி ஓடிச் சென்றபோது யாரைச் சந்தித்தார்கள்?
9. சீஷர்கள் தம்மை எங்கே சந்திக்க வேண்டுமென்று இயேசு கூறினார்?
10. இயேசு பரத்துக்கேறுவதற்கு முன்பாகத் தமது சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை என்ன?
11. அப்போதிலிருந்து காலத்தின் முடிவு வரையில் இயேசு யாருடன்கூட இருப்பதாகக் கூறினார்?

## ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 8

## மத்தேயு 28

1. இயேசுவின் செய்தியை எல்லா மக்களோடும் பகிர்ந்துகொள்ள வேண்டும். தேவன் நீங்கள் தேவனுடைய செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும்படியாக பலத்தையும் வாஞ்சை யையும் கொடுத்து உங்கள் இருதயத்தில் கிரியைசெய்துகொண்டிருக்கலாம். பல வழிகளிலும் மற்றவர்களுக்குக் கிறிஸ்துவின் அன்பைப்பற்றிக் கூறலாம். ஒரு நபருக்கோ அல்லது குழுவுக்கோ அவருடைய வாழ்க்கைக் குறித்துக் கூறுவது நல்லதொரு வழியாகும். இந்தக் கையேட்டைக் கொண்டு ஏழு வாரங்களில் உங்களால் இதைச் செய்ய முடியும். நான்காம் பாடத்திலிருந்து, தேவன் உங்கள் இருதயத்தில் பாரத்தைக் கொடுக்கும் நபர்களுக்காக ஜெபித்துவந்திருக்கிறோம். அநேகமாக இந்த மக்களுக்கு உங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றிக் கூறச் சிறிதளவாவது வாய்ப்புக் கிடைத்திருக்கும் என்று நம்புகிறோம். இல்லாவிட்டால், இந்த வாரத்தில் அவர்களை அணுகுங்கள்.

   - இந்த நபரிடம் சென்று அவர் எவ்வளவு பயங்கரமான மனிதர் என்றும், அவர்கள் மனந்திரும்பாவிட்டால் தேவன் அவர்களை அவியாத அக்கினியில் போட்டுவிடுவார் என்றும் சொல்லாதிருங்கள்.
   - **அவர்களுடைய வீட்டில்** உங்களோடுகூட ஒரு சிறிய வேதாகம ஆய்வில் பங்கெடுக்கும்படி அவர்களை அழையுங்கள். நீங்கள் வேதாகமத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்றும், ஏழு வாரங்களில் அவர்கள் உங்களோடு சேர்ந்து கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிப் படிக்க ஆவலோடு இருக்கிறார்களா என்றும் கேளுங்கள்.
   - அவர்களுடையவீட்டுக்குச்செல்லும்போது,உங்களோடுஒருபங்காளியைஅழைத்துச் செல்லுங்கள். அவர் உங்கள் வேதாகம ஆய்வுக் குழுவைச் சேர்ந்தவராக இருக்கலாம், அல்லது நீங்கள் சபையில் சந்தித்த ஒருவராக இருக்கலாம். உங்களுடைய வேதாகம ஆய்வுக் குழுவின் தலைவர் உங்களோடு செல்ல விருப்பமாக இருக்கலாம்.
   - அங்கே செல்லும்போது, அந்த நபருடைய வாழ்க்கையில் நடக்கும் காரியங்களைக் குறித்துப் பேச நேரம் செலவழியுங்கள். அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்து, அவர்களுக்குச் செவிகொடுங்கள். அவர்களுக்காகவும், அவர்களுடைய வேலைக்காகவும், குடும்பத்துக்காகவும் ஜெபித்து, தேவன் தமது சமாதானத்தை அந்த வீட்டுக்குக் கொடுக்குமாறு வேண்டிக்கொள்ளுங்கள்.
   - கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த முதல் உண்மைக்கதையோடு துவங்குங்கள். அவர்கள் கேள்விகள் கேட்க அனுமதியுங்கள். உங்களுக்குப் பதில் தெரியாவிட்டாலும் சரி. உங்களுக்குப் பதில் தெரியவில்லை என்பதால், உங்கள் வேதாகமக் குழுத் தலைவரிடம் கேட்டு அடுத்த வாரம் பதிலைச் சொல்லுவதாக அவர்களிடம் தெரிவியுங்கள்.
   - ஒரு மணி நேரத்துக்கு மேலாக அவர்களுடைய வீட்டில் இராதேயுங்கள். இது ஒரு குறுகிய வேதாகம ஆய்வு என்பதை நினைவில் வைத்திருங்கள்.
   - அந்த வாரம் முழுவதும், அதற்குப் பிறகு ஒவ்வொரு வாரமும் இந்த நபருக்காகவும் அவருடைய குடும்பத்துக்காகவும் ஜெபியுங்கள். அவர்களுக்காக ஜெபிப்பதில் உங்கள் குழு உறுப்பினர்களும் சேர்ந்துகொள்ளும்படி செய்யுங்கள்.

**நினைவில் வைத்திருங்கள்**: எவரையும் குணமாக்கவோ அல்லது பிசாசுகளை விரட்டவோ நமக்கு வல்லமை இல்லாததுபோல, கிறிஸ்துவின் தேவையைக் குறித்து எந்த நபருக்கும் உணர்த்தும் வல்லமையும் நம்மிடம் இல்லை. நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே இந்த வல்லமையைப் பெற்றிருக்கிறார். மக்களின் நோய்களைக் குணமாக்கும் வல்லமை அவருக்குண்டு;

மக்களின் வாழ்க்கையிலிருந்து பிசாசுகளை விரட்டும் வல்லமை அவருக்குண்டு; அவரே ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் பாவத்தின் கட்டுக்களை முறித்து, அந்த மனிதனைக் கிறிஸ்துவுக்குள் மனந்திரும்புதலுக்குள் கொண்டுவருகிறார். பகிர்ந்துகொண்டு ஜெபிப்பதே நமது பொறுப்பாகும்.

ஒரு நபரோடு ஏழு வார வேதாகம ஆய்வை நடத்த முடியாத சூழ்நிலையில் நீங்கள் ஒருவேளை இருக்கலாம். ஆனால் இயேசு கிறிஸ்துவைக் குறித்து அவர்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பலாம்.

**என்ன செய்ய வேண்டும்:**

- நீங்கள் நினைவில் வைத்திருக்கிறபடி அவர்களுக்கு இயேசுவின் வாழ்க்கையைக் குறித்துக் கூறுங்கள். அவருடைய பிறப்பு, ஞானஸ்நானம், அவருடைய வாழ்க்கை, அவர் செய்த அற்புதங்கள், அவருடைய அன்பு, மனந்திரும்புதல் குறித்த அவருடைய செய்தி, அவர் காட்டிக்கொடுக்கப்படுதல், அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் இவைகளைக் குறித்துக் கூறுங்கள்.
- இயேசுவின் நாட்களில் இருந்த மக்களைப்போல, நாம் நல்லவர்களாக இருந்தாலும்கூட நாமும் தேவனுக்கு முன்பாகத் தவறுகளைச் செய்திருக்கிறோம் என்று சொல்லுங்கள். அதாவது நாம் எல்லோருமே பாவம் செய்திருக்கிறோம். சில பாவங்களைக் குறித்த எடுத்துக்காட்டுகளை அவர்களுக்குச் சொல்லுங்கள்: பொய் சொல்லுதல், திருடுதல், வெறுத்தல், பொறாமைகொள்ளுதல், விபசாரம், போன்றவை.
- தேவன் வேதாகமத்தில் இருந்த மக்களை மன்னித்ததுபோல, நீங்கள் உங்கள் பாவத்தைவிட்டு மனந்திரும்பியபோது அவர் உங்களையும் மன்னித்தார் என்று சொல்லுங்கள்.
- கிறிஸ்துவுக்கு முன்னால் உங்கள் வாழ்க்கையைக் குறித்துக் கொஞ்சமாக விளக்குங்கள். எப்போது நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதைத் தெரிந்துகொண்டீர்கள், அதற்குப் பின்னர் உங்களுடைய வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுங்கள் (உங்களுடைய சாட்சி).
- வேதாகமத்தில் மிக முக்கியமான வசனங்களில் ஒன்றாகிய யோவான் 3:16 வசனத்தை மனப்பாடமாகக் கூறுங்கள், அல்லது வாசித்துக் காட்டுங்கள். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று அந்த வசனம் சொல்லுகிறது.
- அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் கொடுக்கும் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்களா என்று அவர்களிடம் கேளுங்கள்.
- விசுவாசிப்பது என்றால் உங்கள் வாழ்க்கையைக் கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுப்பது என்று விளக்குங்கள். இது அவர்மீது நம்பிக்கை வைத்து, உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்புக்கொடுப்பதாகும்.
- அவர்கள் "ஆம்" என்று சொன்னால், அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஜெபிக்கும் எளிய ஜெபத்தை ஜெபிக்க அவர்களுக்கு உதவுங்கள்.
- அவர்கள் "முடியாது" என்று சொன்னால், இப்போது அவர்களுக்காக ஜெபிக்கலாமா என்று கேளுங்கள். பிறகு அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய சத்தியத்தைப் புரிந்துகொள்ள அவர் உதவ வேண்டுமென்று ஜெபியுங்கள்.

***இப்போது பாடத்தை நிறுத்திவிட்டு, ஒரு குழுவாக மற்றவர்களுக்குக் கிறிஸ்துவை அறிவிப்பதைப் பயிற்சி செய்யுங்கள். குழுவை இருவர் இருவராகப் பிரித்து, ஒவ்வொருவரும் முழுமையாகச் செய்தியைச் சொல்லுவதில் பயிற்சிபெறும்படி செய்யுங்கள்.**

பயிற்சி முடிந்தவுடன் “இது முடியாத காரியம். என்னால் ஒருவரிடமும் கிறிஸ்துவைப்பற்றிக் கூற முடியாது” என்று நீங்கள் நினைப்பீர்களானால், இந்த இறுதியான சத்தியத்தைப் பாருங்கள்:

2. “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்”. நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அந்தக் கணத்திலேயே தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் வந்து நமது வாழ்க்கையில் வாசம்பண்ணுகிறார் என்று வேதாகமம் போதிக்கிறது. நீங்கள் அதை உணராவிட்டாலும், அவர் ஏற்கெனவே உங்கள் வாழ்க்கையில் கிரியைசெய்து வருகிறார்.

   - நாம் ஒவ்வொரு நாளும் தேவனோடுகூட தனிமையில் அமைதியான நேரத்தைச் செலவழிக்கும்போது, இவரே நமக்குப் போதிக்கிறார் (யோவான் 14:26).
   - நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது இவரே நமக்குக் குற்ற உணர்வைக் கொடுக்கிறார். இவரே முதலில் நாம் பாவிகள் என்றும், நமது வாழ்க்கையில் கிறிஸ்துவின் மன்னிப்பு நமக்குத் தேவை என்றும் நமக்கு உணர்த்தினார் (யோவான் 16:8-11).
   - இவரே நமக்கு ஞானத்தைக் கொடுத்து, நமது வாழ்க்கைக்கான தேவனுடைய பரிபூரண சித்தத்தில் நம்மை வழிநடத்துகிறார் (யோவான் 16:13).
   - நாம் வருத்தப்படும்போது அவர் நம்மை ஆறுதல்படுத்துகிறார் (அப்போஸ்தலர் 9:31).
   - நம்மால் செய்ய முடியும் என்று நாம் கனவுகூடக் காணாத செயல்களைச் செய்யும்படி அவர் நமக்கு வரங்களைக் கொடுக்கிறார். கிறிஸ்துவைப்பற்றி மற்றவர்களுக்குக் கூறுவதற்கான வார்த்தையை நமக்குக் கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 12).

நம்மால் ஒருபோதும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இருக்க வேண்டிய பிரகாரமாக இருக்க முடியாது என்று நினைக்கலாம். தேவனுக்குக் கீழ்ப்படிவது இயலாத காரியம் என்று நாம் நினைக்கலாம். இது உண்மை என்பதே சத்தியமாகும். கிறிஸ்துவைப் பின்பற்ற நம்மால் எதையும் செய்ய முடியாது. ஆனால் நமது வாழ்க்கையில் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் மூலமாகத் தேவனால் அதைச் செய்ய முடியும்.

இதுவே மற்றவர்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லுவதின் இரகசியமாகும்; இது பயமில்லாத வாழ்க்கை வாழுவதற்கான இரகசியமாகும்; இது ஒவ்வொரு நாளும் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கான இரகசியமாகும். பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர் நமது வாழ்க்கையில் நுழையும்படி நாம் அனுமதிக்கும்போது, அவருடைய தொடர்ந்த பிரசன்னத்தின் ஈவை நமக்கு அருளியிருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நமது பலம் மற்றும் வல்லமைக்கு ஆதாரமாக இருக்கிறது. தேவன் நம் ஒவ்வொருவருக்காகவும் அற்புதமான திட்டங்களையும், நம்ப முடியாத கருத்துக்களையும், அழகான நோக்கத்தையும் வைத்திருக்கிறார் என்று வேதாகமம் போதிக்கிறது. எரேமியா 29:11-13 வசனங்களில் காணப்படும் சிறப்பான வாக்குத்தத்தத்தோடுகூட நாம் இந்த ஆய்வை முடிப்போமாக:

**“நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.”**

## நீங்கள் தேவனை இன்னுமதிகமாக அறிவதை நாடும்போது, அவர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## சுவிசேஷத்தை அறிவித்தல்

**(இந்த ஆறு வசனங்களும் சுவிசேஷத்தின் சாராம்சத்தை விளக்குகின்றன).**

1. **உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய நோக்கம்**

1 யோவான் 5:13 வசனத்தில் வேதாகமம் "**உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக் கிறேன்**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: தேவன் மனிதர்மீது கொண்டிருக்கும் அன்பின் காரணமாக அவர்களுக்கு நித்திய ஜீவனின் நிச்சயத்தைக் கொடுக்க விரும்புகிறார் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: நித்திய வாழ்வு என்பது இரண்டு காரியங்களாகும்:

1) நீங்கள் இந்த வாழ்க்கையில் வாழும்போதே இயேசு கிறிஸ்துவை அறிந்து அவருடைய சமாதானத்தை உங்கள் இருதயத்தில் கொண்டிருத்தல் (யோவான் 17:3).

2) நீங்கள் மரித்த பிறகு பரலோகத்தில் இயேசு கிறிஸ்துவோடுகூட நித்தியமாக வாழுதல் (யோவான் 14:1-3).

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: நீங்கள் நித்திய வாழ்வைப் பெற்றிருக்கிறீர்கள் என்ற நிச்சயத்தைப் பெற விரும்புகிறீர்களா?

**கவனிக்கவும்: கிறிஸ்தவ அல்லது கிறிஸ்தவரல்லாத கலாச்சாரங்களின் அடிப்படையில்** இந்தச் சொற்களுக்குத் தெளிவான விளக்கம் கொடுக்க வேண்டும். இதற்கு அதிகமான நேரம் பிடிக்கும்.

2. **உங்களுடைய தேவை**

ரோமர் 3:23 வசனத்தில் வேதாகமம் "**எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி...**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: நாம் எல்லோரும் பாவிகள் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: பாவம் என்றால் என்ன? பாவம் என்பது தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதாகும். எடுத்துக்காட்டாக, நாம் எல்லோருமே பொய்சொல்லுதல், கோபப்படுதல், கசப்பு, பேராசை, இச்சை, பெருமை ஆகிய பாவங்களைச் செய்திருக்கிறோம்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா? பாவத்தின் பின்விளைவு என்ன?

ரோமர் 6:23 வசனத்தில் வேதாகமம் "**பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: நாம் எல்லோரும் நமது பாவங்களுக்காக மரணத்துக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: மரணம் என்றால் என்ன? மரணம் என்பது தேவனிடமிருந்து இரண்டு வழிகளில் பிரிக்கப்பட்டிருப்பதாகும்:

முதலாவதாக, மரணம் என்பது இந்த வாழ்க்கையிலேயே தேவனிடமிருந்து பிரிக்கப் பட்டிருப்பதாகும். இது சந்தோஷமோ அல்லது ஆத்துமாவில் சமாதானமோ இல்லாத வாழ்க்கையாகும். இது உங்கள் இருதயத்தில் இயேசு இல்லாத, நித்திய வாழ்வைக் குறித்த

நிச்சயமில்லாத வாழ்க்கையாகும். தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருப்பது மனிதனுக்கு வெறுமையான, பயமுள்ள இருதயத்தைக் கொடுக்கிறது.

இரண்டாவதாக, மரணம் என்பது தேவனிடமிருந்து நரகத்தில் நித்தியமாகப் பிரிக்கப் பட்டிருப்பதாகும். இது நித்தியத்துக்கும் கிறிஸ்து இல்லாத வாழ்க்கையாகும். வேதாகமம் சொல்லுகிறபடி, நாம் எல்லோருமே, நமது பாவங்களின் காரணமாக, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட மரணத்துக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: நீங்கள் உங்கள் பாவத்தின் காரணமாக, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, மரணத்துக்குத் தகுதியாக இருக்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா?

## 3. தேவன் அருளுவது...

ரோமர் 5:8 வசனத்தில் வேதாகமம் "**நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: தேவன் நம்மிடத்தில் அதிகமாக அன்புகூருகிறபடியால், நமது பாவங்களுக்காக மரிக்கும்படி அவர் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொடுத்தார் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: பாவத்துக்கான ஒரே தண்டனை மரணமாகும். நமது இடத்தில், நமது பாவத்துக்கான தண்டனையைச் செலுத்தும்படியாக, இயேசு கிறிஸ்து தண்டிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட்டு, சிலுவையில் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

இயேசுவின் மரணமே பாவத்தின் குற்றத்திலிருந்து மனிதனை விடுவிக்க ஒரே போதுமான பலியாக இருக்கிறது. பலர் தங்களுடைய நல்ல வாழ்க்கை அல்லது நல்ல செயல்களைச் சார்ந்து பல வழிகளிலும் தேவனிடத்தில் வருவதற்கு முயலுகிறார்கள். பரிசுத்தவான்கள், விக்கிரகங்கள், சொரூபங்கள், ஆவிகள் அல்லது அவதாரங்களின் மூலமாகவும் அவர்கள் தேவனிடத்தில் வர முயலுகிறார்கள்.

மனிதன் தனது சொந்த முயற்சிகளால் பாவத்தைச் சுத்திகரிக்க முடியாது. தேவனோடு உறவு கொள்ளுவதற்கான ஒரே வழி இயேசு கிறிஸ்துவின் மூலமாகச் செல்லுவதாகும். நமது பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரித்த பிறகு, அவர் மரணத்தை வெற்றிகொண்டு, உயிரோடு எழுந்தார். அவர் இப்போதும் உயிரோடு இருக்கிறார், உங்கள் இருதயத்தில் வாழ விரும்புகிறார்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: இயேசு கிறிஸ்து உங்கள் ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் இருக்கிறார் என்பதை விசுவாசிக்கிறீர்களா?

## 4. உங்கள் பதில்

ரோமர் 10:9 வசனத்தில் வேதாகமம் "**கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: இயேசு கிறிஸ்துவை உங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: இயேசுவை ஏற்றுக்கொள்ள நீங்கள் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்:

1) முதலாவதாக, இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், கிறிஸ்துவை உங்கள் ஒரே ஆண்டவராக அறிக்கையிட வேண்டும். நீங்கள் உங்கள் பாவங்களைவிட்டுத் திரும்பி

கிறிஸ்துவைப்பின்பற்றவேண்டும்.அதாவதுஉங்கள்வாழ்க்கையின்முழுக்கட்டுப்பாட்டையும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். இதுவே மனந்திரும்புதலாகும்.

2) இரண்டாவதாக, இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்றும் அவரே உங்கள் ஒரே இரட்சகர் என்றும் விசுவாசிக்க வேண்டும். நித்திய ஜீவனை அடைய வேண்டுமானால், நல்லொழுக்கம், நல்ல செயல்கள், விக்கிரகங்கள், சொரூபங்கள், பரிசுத்தவான்கள் அல்லது அவதாரங்களின்மீது உங்களப் பார்வையை வைப்பது உங்களை இரட்சிக்கமாட்டாது.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடவும், உங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்கவும் நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? மற்றக் காரியங்களின்மீது நம்பிக்கை வைப்பதை விட்டுவிட்டு, இப்போதே இயேசு கிறிஸ்துவை உங்கள் ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு அவருக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாக இருக்கிறீர்களா?

ரோமர் 10:13 வசனத்தில் வேதாகமம் "**கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: இயேசுவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரும் இரட்சிப்படைவார்கள் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: இப்போதே நீங்கள் உங்கள் இருதயத்தில் இயேசுவை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ள முடியும்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: இயேசுவுக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து, இப்போதே அவர் உங்கள் வாழ்க்கையில் பிரவேசிக்கும்படி வேண்டிக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறீர்களா? நீங்கள் ஆயத்தமாக இருப்பீர்களானால், உங்கள் முழு இருதயத்தோடும் இந்த ஜெபத்தைத் தேவனிடம் எறெடுங்கள்:

> "ஆண்டவரே, நான் ஒரு பாவி. எனது ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் நான் உம்மீது என் நம்பிக்கையை வைக்கிறேன். எனது வாழ்க்கையை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். எனது இருதயத்துக்குள் வந்து, இப்போதே என்னை இரட்சியும். என்னை மாற்றி, எனது வாழ்க்கையின் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொள்ளும். ஆமென்."

இயேசு உங்கள் ஜெபத்துக்குப் பதிலளித்திருக்கிறார் என்று நம்புகிறீர்களா? இயேசு இப்போது எங்கே இருக்கிறார்? நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?